REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஜுலை 7 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN
தினகரன்
1932 - 2022

வரு. 90 இல. 158 | Thursday 07, July, 2022 | 12 பக்கங்கள் | 40/-

MOBILE
TALK TEXT DATA BOOSTER 505
ஒரே பக்கேஜில் TALK TEXT DATA
ஆகியவற்றை BOOST செய்யுங்கள்
Voice 1777 நிமிடங்கள்
ஏனைய வலையமைப்பிற்கு 1000 நிமிடங்கள் + M2M 777 நிமிடங்கள்
Text 1777 sms
ஏனைய வலையமைப்பிற்கு 1000 SMS + M2M 777 SMS
Data 2GB anytime data
மேலதிக டேட்டாவையும் செயற்படுத்திடலாம்.
நிபந்தனைகளுக்கு உட்பட்டது. (வரிகள் உள்ளடக்கப்பட்ட கட்டணங்கள்)
TRC/M/PRO/22/03
SLTMOBITEL நிகரற்ற இணைப்பு

## அடுத்த வாரம் கொழும்பில் Gas விநியோகம் ஆரம்பம்

### ஜுலை 11,12 இல் 140 இடங்களில் ஏற்பாடு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



சமையல் எரிவாயுவை நான்கு மாதங்களுக்கு தட்டுப்பாடின்றி பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்று பாராளுமன்றத்தில் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கொழும்பில் ஜுலை 11, 12 திகதிகளில் 140 இடங்களில் அவற்றை பெற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

06

### அமைச்சர் பந்துலவுடன் நடத்திய பேச்சில் திருப்தி

## ரயில்வே தொழிற்சங்க போராட்டம் நேற்று மாலை முடிவுக்கு வந்தது



புகையிரத திணைக்கள தொழிற்சங்கங்கள் நேற்று முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பு போராட்டம், போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து முடிவுக்கு வந்தது.

போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மற்றும் புகையிரத திணைக்கள தொழிற்சங்க பிரதிநிதிகளுடன்

06

## நிதியமைச்சர் பதவியிலிருந்து பிரதமர் ரணில் விலக வேண்டும்

### அமைச்சர் தம்மிக்க பெரேரா பகிரங்க கோரிக்கை



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதியமைச்சர் பதவியில் இருந்து உடனடியாக விலக வேண்டுமென முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், நிதியமைச்சரான பிரதமர் ரணில் விக்ரமசிங்க

06

### குறைந்த விலைமனுக்கோரலை இரத்துசெய்து

# அதிக விலையில் எரிவாயுவை கொள்வனவு செய்தமை ஏன்?

### அமைச்சரவை அனுமதியும் மீறப்பட்டு லிற்றோ நிறுவனம் செயற்பாடு

மலேசிய சியாம் காஸ் நிறுவனத்திடமிருந்து 96 அமெரிக்க டொலர் விலையில் சமையல் எரிவாயு கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கிய விலைமனுக்

**கணக்காய்வாளர் திணைக்களத்தினூடாக விசாரணை நடத்த கோப் குழு பணிப்புரை**

**96 டொலருக்கு கிடைத்த Gas சிலிண்டரை இரத்துச் செய்து 129 டொலருக்கு வழங்கப்பட்டமை கண்டுபிடிப்பு**

கோரல் (Term Tender) இரத்துச் செய்யப்பட்டு 129 அமெரிக்க டொலர் வீதம் ஒரு இலட்சம் மெற்றிக் தொன் சமையல் எரிவாயுவை ஓமான் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்தமை தொடர்பில்

06



### பொருளாதார நெருக்கடியில் கடுமையாக வாடும்

## இலங்கை மக்களுக்கு தமிழக பொலிஸார் 1.40 கோடி நிதியுதவி




தமிழக அமைச்சரிடம் DGP சைலேந்திரபாபு கையளிப்பு

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் மக்களுக்கு உதவிடும் வகையில் தமிழக போலீசார் சார்பில் 01 கோடியே 40 இலட்சம் (இந்திய ரூபா) நிதியை தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினிடம் வழங்கினர்.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி

06

### குற்றச்சாட்டு ஒன்று தொடர்பில் விசாரணை:

## அமைச்சுப் பதவியிலிருந்து நிமல் தற்காலிகமாக விலகல்

**ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிக்கை**



துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சுப் பதவியில் இருந்து நிமல் சிறிபால டி சில்வா தற்காலிகமாக விலகியிருப்பார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு ஜனாதிபதி ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

விமான சேவைகள் அமைச்சுக்கும் தனியார்

06

### ஒரே நாளில் அல்லாது வெவ்வேறு தினங்களில்

## எதிர்வரும் நாட்களில் 05 எரிபொருள் கப்பல்கள்

### உரிய பணத்தை செலுத்த மத்திய வங்கி தயார்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



எதிர்வரும் நாட்களில் 5 எரிபொருள் கப்பல்கள் நாட்டை வந்தடைய உள்ளபோதும் அவை ஒரே நாளில் வரும் என்பதில் உண்மை கிடையாது என மின்சக்தி மற்றும் எரிசக்தி

06

### ஜனாதிபதி மாளிகை முன் ஆர்ப்பாட்டம்:

## ஹிருணிகாவுக்கும் கைதான 11 பேருக்கும் பொலிஸ் பிணை



ஜனாதிபதி மாளிகைக்கருகில் நேற்று காலை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமசந்திர உள்ளிட்ட 11 பேருக்கு பொலிஸ் பிணை வழங்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுப்பட்ட போது கைதான

06


### தங்கத்தின் விலையில் சடுதியாக வீழ்ச்சி

## 24 கரட் பவுண் 1,80,250 ரூபாவாக பதிவு



உலக சந்தையில் நேற்று தங்கம் ஒரு அவுன்ஸ் இலங்கை ரூபாவின் படி 638,635 ரூபாவாக பதிவாகியது. இலங்கையில் கடந்த சில தினங்களை விட நேற்று தங்கத்தின் விலையில் சடுதியான வீழ்ச்சி ஏற்பட்டது. நேற்றைய தங்க நிலவரத்தின்படி,

06



## இலங்கையில் கைதான மீனவர்களை விடுவிக்கவும்

தமிழக கட்சிகள் பலவும் கோரிக்கை 11



போக்குவரத்தின்றி அவதியுறும் நோயாளர்களுக்கு

## தொலைபேசி, whats app, இமோ ஊடாக சிகிச்சையளிக்கும் டாக்டர்

08

## படகு மூலமாக அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 53 பேர் கைது

### திருமலை, மன்னார் பகுதிகளில் சம்பவம்



சட்டவிரோதமான முறையில் கடல்மார்க்கமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 45 பேரை இலங்கை கடற்படையினர் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர். திருகோணமலை குச்சவெளி கடற்பரப்பில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 11 ஆண்களும் 9 பெண்களும் உள்ளடங்குவதுடன், 20 வயதுக்கு கீழ்பட்ட 25 பேர் அடங்குவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்ட நபர்களை பொறுப்பில் எடுத்த

06

## பெற்றோல் திருடும் போது தீப்பிடித்த மோட்டார் சைக்கிள்

### நீர் என நினைத்து தின்னரை ஊற்றியதால் பரபரப்பு



இரவு நேரத்தில் வீட்டு முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளிலிருந்த பெற்றோலை திருடிய ஒருவர், வெளிச்சத்தை ஏற்படுத்த சிகரெட் லைட்டரை பயன்படுத்தியதால் மோட்டார் சைக்கிள்

06

## சீமெந்து விலை மீண்டும் ரூபா 200 ஆல் அதிகரிப்பு

### பக்கற்றின் புதிய விலை ரூ.3,200 ஆனது



சீமெந்து பக்கெற் ஒன்றின் விலை 200 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சீமெந்து விநியோகஸ்தர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். இதன்படி, 50 கிலோ கிராம் எடையுடைய சீமெந்து பக்கெற் ஒன்றின் புதிய விலை 3200 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் 50 கிலோ கிராம் சீமெந்து

06

## பிரதமர் பதவியை ஏற்பதற்கு தயார்


### அநுரகுமார MP தெரிவிப்பு



பிரதமர் பதவியை ஏற்க தாம் தயாராகவிருப்பதாக ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

06

FUN BLASTER இடமிருந்து
மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்
Facebook WhatsApp மற்றும் YouTube
உடன் மேலதிக டேட்டா*



ரூ.360/- மட்டுமே
மேலதிக வரிகள் இல்லை
செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்
* 1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது
SD (360p) Video தரத்தினை வழங்குகின்றது
4G SIM அட்டையுடன் 4G Smartphone அவசியமாகும்
TRC/D/PRO/20/10
Dialog எதிர்காலம் இன்றே.

## அறிவித்தல்

### கேள்விக்கான அழைப்பு

### லங்கா இலெக்ரிகல் கம்பனி (பிரைவட்) லிமிட்டட்

**கேள்வியின் பெயர்:- ஜெனிட்டோரியல் சேவைப் பெறுகை**

**கேள்வி இல:- KA/ADM/PRO/2022(05)**

லங்கா இலெக்ரிகல் கம்பனி (பிரைவட்) லிமிட்டட் களுத்துறை கிளை அலுவலகத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு 2022/2024ஆம் ஆண்டிற்காக ஜெனிட்டோரியல் சேவைப் பெறுகைக்காக தகைமையுடைய மற்றும் தகுதியான கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| சேவை நிலையம் | முகவரி | ஊழியர் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | பெண் | ஆண் |
| கிளை அலுவலகம் - களுத்துறை | இல. 14/1, ஞானோதய மாவத்த களுத்துறை, தெற்கு | 02 | 01 |
| பாவனையாளர் சேவை நிலையம் - களுத்துறை | இல. 31/2, காலி வீதி, மஹவஸ்கடுவ, வஸ்கடுவ | - | 01 |
| பாவனையாளர் சேவை நிலையம் - பயாகல | இல. 196, காலி வீதி, பயாகல | 01 | 01 |
| பாவனையாளர் சேவை நிலையம் - அளுத்கம | இல. 126, கலுவா மோதர, காலி வீதி, அளுத்கம | 01 | 01 |
| பிரதிப்பொது முகாமையாளர் (செயற்பாடுகள் தெற்கு) அலுவலகம் - களுத்துறை வடக்கு) | இல. 30/1, வடக்கு சுமங்கள வீதி, களுத்துறை வடக்கு | 01 | - |

01. உத்தேச சேவைக்காலம் கேள்வி வழங்கப்படும் நாள் முதல் இரண்டு வருடங்களாகும்.

02. தேசிய போட்டி கேள்விகோரல் முறைமை (NCB) மூலம் கேள்விகள் மேற்கொள்ளப்படும்.

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களுக்காக களுத்துறை தெற்கு, ஞானோதய மாவத்த, இல. 14/1 இல் அமைந்துள்ள களுத்துறை கிளை அலுவலகத்தில், நிர்வாக அதிகாரியிடம் இன்றைய தினம் முதல் 14 நாட்களுக்குள் அலுவலக நாட்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 4.30 இற்கு இடையில்) கேள்வி ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.

04. மீளளிக்கப்படாத ரூ. 1000.00 கட்டணத்தை செலுத்திய பின்னர் கேள்வி ஆவணத் தொகுதியொன்றை களுத்துறை கிளை அலுவலகத்தில் கொள்வனவு செய்யலாம். குறித்த கொடுப்பனவை களுத்துறை கிளை அலுவலகத்தின் கணக்குப் பிரிவிற்கு காசாக மேற்கொள்ளல் வேண்டும்.

05. கேள்விகள் 2022.07.21 மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கிளை அலுவலகத்திற்கு கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் அல்லது பெக்ஸ் மூலம் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

06. கேள்வி கோரல் 2022.07.21 பி.ப. 2.00 இற்கு கிளை அலுவலகத்தில் பெறுகைக்குழுவினால் திறக்கப்படுவதுடன், அவ் வேளையில் தனிப்பட்ட முறையில் சமுகமளிப்பதற்கு வாய்ப்பு உண்டு.

07. கேள்விகளை ஒப்படைப்பதற்காக குறித்த இறுதித் தினத்திலிருந்து 60 நாட்கள் கொண்ட காலத்திற்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**லங்கா இலெக்ரிகல் கம்பனி (பிரைவட்) லிமிட்டட்**
**(கிளை அலுவலகம், களுத்துறை)**
**இல. 14/1, ஞானோதய மாவத்த,**
**களுத்துறை தெற்கு**
**034-2223764**

## ஏல விற்பனை அறிவித்தல்
## இலங்கை வங்கி

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

***பொலன்னறுவ, கந்துருவெல, முஸ்லிம் கொலனி, இல. 25 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. மொஹமட் மிஹிலார் ஹலாப்தீன் அல்லது மிஹிலார் ஹலவ்தீன் ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.***

தொடர்பு: **575/Recovery/Halabdeen/2022**

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் **30.11.2018ஆம் திகதி 2100ஆம்** இலக்க வர்த்தமானியிலும் **19.11.2018ஆம் திகதி தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ்** ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் **இல. 182/3 (50/3), விஹார மாவத்தை, கொலன்னாவ** என்னும் முகவரியைச் சேர்ந்த **T & H ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள்** 30.08.2022ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டம், தமங்கடுவ பிரதேச செயலாளர் பிரிவில் மெதபற்று தமங்கடுவ பிரதேசசபை எல்லைகளுள் மாணிக்கம்பட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் (இல. 181), கந்துருவெல கிராமத்தில் அமைந்த **"கந்துருவெலதமனகலே அல்லது திவுலான முஸ்லிம் கொலனி"** என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் W.A. பியதாஸ தயாரித்த 21.02.1999 திகதியிட்ட வரைபடம் இல. 117,02,99ல் விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் FCP PO 151ல் துண்டு 5ம், கிழக்கில் FCP PO 151ல் துண்டு 5ம், தெற்கில் எஸ்.எம்.ஹனீபா உரிமைகோரும் FCP PO 151ல் துண்டு 366ன் ஒரு பகுதி வரைபடம் இல.117/02/99ல் துண்டுகள் 3 மற்றும் 4 (பாதையும்), வட மேற்கில் FCP PO 151ல் துண்டு 505ம் வரைபடம் இல.117/02/99ல் துண்டு 1ம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 117/02/99ன் படி இரண்டு ஏக்கர் (ஏ2.றூ0.பே.0) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் அத்துடன் W.A.பியதாஸ தயாரித்த 21.02.1999 திகதியிட்ட வரைபடம் இல.117/02/99ல் துண்டு 4 என அடையாளமிட்டு ஒதுக்கப்பட்ட பாதை மீதான வழி உரிமையும் ஆகும். இது பொலன்னறுவை காணிப்பதிவகத்தில் LDO B/11/71ல் பதிவுசெய்யப்பட்டது.

வரைபடம் இல. 117/02/99ல் மேற்குறிப்பிட்ட துண்டு 2 அண்மைய அளவையின் படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டம், தமங்கடுவ பிரதேச செயலாளர் பிரிவில் மெதபற்று தமங்கடுவ பிரதேசசபை எல்லைகளுள் மேற்குறிப்பிட்ட கந்துருவெல கிராமத்தில் அமைந்த கந்துருவெலதமனகலே அல்லது திவுலான முஸ்லிம் கொலனி என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.G.R. அயோனி தயாரித்த 11.06.2012 திகதியிட்ட வரைபடம் இல.2012 Thaimal 37ல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு **வடகிழக்கில்** FCP PO 151ல் துண்டு 5ம், **தென்கிழக்கில்** FCP PO 151ல் துண்டு 5ம், **தென்மேற்கில்** பிரவேசப் பாதையும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் W.A. பியதாஸவின் வரைபடம் இல.117/02/99ல் காணித்துண்டுகள் 1ம், 3ம், **வடமேற்கில்** FCP PO 151ல் துண்டு 505ம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2012 Thama 37ன் பிரகாரம் இரண்டு ஏக்கர் பத்து தசம் ஆறு பேர்ச்சுகள் (ஏ2.றூ0.பே.10.6) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 117/02/99ல் துண்டு 04 மீதான வழி உரிமையும் ஆகும்.

அத்துடன் இரண்டாவது அட்டவணையில் விபரித்த பொருத்து மற்றும் இயந்திரசாதனமும் ஆகும்.

**மேலே இரண்டாவது அட்டவணையில் விபரித்த இயந்திர சாதனப்பட்டியல்**

மேலே முதலாவது அட்டவணையில் விபரித்த காணிக்கும் நிலமனைக்கும் பொருத்திய பொருத்து மற்றும் இயந்திரசாதனம் பின்வருமாறு:

| உருப்படி | விபரம் | ரூபா தொகை |
|---|---|---|
| 1 | Elevators, Double 17ft. with 2 HP motor. | 95.200.00 |
| 2. | Overhead rice stock tank with funnel on - Iron frame 10' x 8' x 10' | 250,000.00 |
| 3. | Elevators, Double, 14fi. with 2 HP motor. | 78,400.00 |
| 4. | Vertical Double Roll Rice Polishing Machine. China. Model MPGL 18 Serial No.1724-1 -2001/11. | 275,000.00 |
| 5. | Elevators, Double. 1711. with 3 HP motor. | 95,200.00 |
| 6. | Overhead rice stock tank with funnel on C Iron frame 10°x8x10'. | 350.000.00) |
| 7. | Elevators 2x2.19 1/2 ft. with 2 HP motor | 187,200.00) |
| 8. | Elevators 2x2.19 1/2 ft. with 2 HP motor | 187,200.00 |
| 9. | White Rice Grading Flat Sifier, China. 2013/01. Model MMJP 80x3 Serial No.0130095 | 375,000.00 |
| 10. | Elevators Double 1611, with 3 HP motor | 96,000.00 |
| 11. | Steel overhead rice stock tank with funnel on H Iron frame 8'x8'x8' | 400,000.00 |
| 12. | Colour Sorter ZET 2K4. Model 'Vetal" India. 72 Channels. | 5,200,000.00 |
| 13. | Elevators. Double. 12ft. with 2 HP motor. | 55,000.00) |
| 14. | Elevators. Double. 1411, with 2 HP motor. | 65,000.00 |
| 15. | Paddy sifter with iron frame 3 HP motor. Local | 160,000.00 |
| 16. | Paddy Driver. 28000kg.50 fi.elevator.2HP motor.Fan/30 HP motor. | 3.400,000.00) |
| 17. | Boiler. "Goghran & Annan LTD. Scotland. TP 1729/957329. Reconditioned. 9' & S', | 2,000,000.00 |
| 18. | Boiler Indian, Reconditioned 10° & 4', | 1,000,000.00) |
| 19. | Presser Pump. Centric. Jinasena. | 175,000.00) |
| 20. | Rice sifter with iron frame 3 HP motor. | 60,000.00) |
| 21. | Elevators. 2 Nos. 14ft. with 3 HP motor | 130.000.00 |
| 22. | Elevators. 13ft. with 3 HP motor | 60,000.00 |
| 23. | Elevators, 3 Nos. 12fl. with 2 HP motor. | 165,000.00 |
| 24. | Elevators. 9ft. with 3 HP motor | 45,000.00 |
| 25. | Destoner. 2010.02 Nos. Indian with 3 HP motor | 320,000.00) |
| 26. | Destoner. Local with 2 HP motor. "Jayarathna" | 170,000.00 |
| 27. | Husker. (One shot). Chinese. MLGT 25S. Stamdard. 2011/8. Serial No.30 with 7.5 HP motor | 295,000.00 |
| 28. | Polisher N 120. China. 30 HP motor | 170,000.00 |
| 29. | Jet Rice Polisher. NP 12T 40 HP motor - China | 240,000.00) |
| 30. | Yaka Fan. Local, 02 Nos. with 2 HP motor | 40,000.00 |
| 31. | 72 Channel rice colour sorter (make vital 2K4 serious, CCD camera system, Electrical-1 phase) | 4,800,000.00 |
| 32. | 15 HP piston type air compressor (make - Japan, Air Cooled, Pressure-10 bar/145 PSL, clectrical-3 phasc/50 Hz) | 432,000.00 |
| 33 | 030 CFM air dryer (make - ELGI Refrigerated dryer, electrical - 1 phase/50 Hz, air cooled mimic control machine) | 214,000.00 |
| 34. | Line filet (make - Janatics Air mate, 030 CFM pre filter/fine filter/ Carbon filter) | 152.000.00) |

மேலே முதலாவது அட்டவணையில் விபரித்த காணிக்கும் நிலமனைக்கும் தற்சமயம் ஸ்தாபித்துள்ளதும் விபரித்த மற்றும் காணப்படும் சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட அட்டவணை ஒழுங்காகக் காணப்படுகின்றது.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,**

**திருமதி. M.G.K.P. விமலசேன**
**சிரேஷ்ட முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**மேற்தரக்கிளை கம்பளை.**

## இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/21/PT/20/009 | Heave Compensator | 30,000.00 | 1,000.00 | 28-07-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/20/052 | Spares for Cummins 6CT 8.3 M Engine of the Survey Launch ECHO 3 | 19,000.00 | 1,000.00 | 28-07-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/21/PT/04/055 | Trouser Black, Blue & White – 1700 Nos. | 30,000.00 | 1,000.00 | 28-07-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/20/054 | 1260 Nos. Filters for UD Nissan Prime Movers | 60,000.00 | 1,000.00 | 01-08-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/21/PT/13/56 | PA Horn Speakers for Transfer Cranes at JCT | 15,000.00 | 1,000.00 | 01-08-2022 பி.ப. 1.30 மணி |
| CES/FP/05/PT/6292 (HM) | 01 No. Multi Beam Echosounder System with Accessories | 700,000.00 | 12,500.00 | 09-08-2022 மு.ப.10.00 மணி |
| CES/FP/07/PT/6327(EL) | Cable Clamps for Festoon System of Cranes at JCT | 25,000.00 | 1,000.00 | 09-08-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/05/PT/6319(EL) | Universal Modules for the Stinis Spreaders at ECT | 50,000.00 | 1,000.00 | 09-08-2022 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/22/PT/03/012 | MS Plate 1200 X 2400 X 10MM -20 Nos. ,MS Plate 1200 X 2400X8MM – 10 Nos. , MS Plate 1200 X 2400X 5MM -02 Nos. | 76,000.00 | 1,000.00 | 21-07-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/17/015 | Zinc Aluminum Sheets & Roofing Accessories | 62,000.00 | 1,000.00 | 01-08-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/01/21 | MS Angle & MS Flat Iron | 46,000.00 | 1,000.00 | 01-08-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 ஜுலை 11ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

# லோகேந்திரலிங்கத்தின் இலக்கிய பணிகளை பாராட்டும் நிகழ்வு



கனடா உதயன் ஆசிரியர் நா. லோகேந்திரலிங்கத்தின் 50 ஆண்டு ஊடக இலக்கியப் பணிகளை பாராட்டும் நிகழ்வும் கனடா உதயன் இலங்கைச் சிறப்பிதழ் பற்றிய ஒரு பார்வையும் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக்கு குழு சார்பில் உடுவை எஸ். தில்லை நடராசா அழைப்பு விடுத்துள்ளார்.

# இலங்கைக்கு குவைத் மனிதாபிமான உதவி

## 10,000 டொலரில் மருந்துப் பொருட்கள்



இலங்கைக்கு 10,000 அமெரிக்க டொலர் பெறுமதியான மருத்துவப் பொருட்களை குவைத் மனிதாபிமான மற்றும் நட்புறவுச் சங்கம் நன்கொடையாக வழங்கியுள்ளது.

உயிர்காக்கும் மருத்துவப் பொருட்களை அரசாங்கம் பேணுவதற்கு உதவுவதற்காக, குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தின் வேண்டுகோளின் பேரில், இந்த குவைத் மனிதாபிமான மற்றும் நட்புறவுச் சங்கம் இந்த அவசர மருத்துவப் பொருட்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

குவைத் மனிதாபிமான மற்றும் நட்புறவுச் சங்கத்தின் தலைவர் அஹமட் அப்துல்லா அல்சரஃப் உடனான சந்திப்பின் போது, குவைத் நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் யூ.எல். மொஹமட் ஜௌஹரின் பங்களிப்புக்கு இலங்கை மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்தார்.

மருத்துவப் பொருட்களில் உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் ஏனைய உபகரணங்களும் உள்ளடங்கியிருந்ததுடன், அவை ஸ்ரீலங்கன் எயார்லைன் மூலம் இலவசமாக இலங்கைக்கு கொண்டு செல்லப்பட்டன. தூதரகத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில், குவைத் மனிதாபிமான மற்றும் நட்புறவுச் சங்கத்தினால் குவைத் எல்லைக்கு வெளியே இத்தகைய பங்களிப்பைச் செய்ய தீர்மானித்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

இச்சங்கம் குவைத்தில் உள்ள இலங்கையர்களுக்கு 81,000 அமெரிக்க டொலர்களுக்கு மேல் விமானக் கட்டணம், உலர் உணவுகள் வழங்குதல் மற்றும் பாடசாலைக் கட்டணம் செலுத்துதல் போன்றவற்றின் மூலம் உதவிகளை வழங்கி வருகின்றது.

# வெல்லவாய எரிபொருள் நிலையத்தில் களேபரம்

## பொலிஸ் அதிகாரி காயம்; 13 பேர் கைது

வெல்லவாய பகுதியில் உள்ள எரிபொருள் நிலையத்தில் இடம்பெற்ற அமைதியின்மை காரணமாக பொலிஸ் அதிகாரி ஒருவர் காயமடைந்துள்ளதுடன், 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

13 சந்தேகநபர்களையும் நேற்று (புதன் கிழமை) நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வெல்லவாய நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு இந்த சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசையில் காத்திருந்த பொதுமக்களுக்கு, எரிபொருள் கையிருப்பு முடிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டதால் அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டது.

இதனையடுத்து பொதுமக்கள் எரிபொருள் நிலையத்தின் மீது கற்கள் மற்றும் போத்தல்களை வீசி தாக்குதல் நடத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்ததுடன், எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கும் சில சேதங்கள் ஏற்பட்டன.

சம்பவம் தொடர்பில் 18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட 13 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன், 20 மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.


## அற்றோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கடுவலை, இஹல பூமிரிய, இல. 307 ஐச் சேர்ந்த விக்ரமாரச்சிகே தொன் ஜானக சஞ்சீவ (தே.அ.அ.இல. 752351953V) ஆகிய நான், மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தின் கடுவலை, பஹல பூமிரிய, இல. 254/1A/3 ஐச் சேர்ந்த பியூமிக ஹசாந்த சுதசிங்ஹ (தே.அ.அ.இல. 870390203V) என்பவருக்கு வழங்கப்பட்ட பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் பக்கம் 21 வரிகள் 269இல் 2021 ஒக்டோபர் 15 திகதியிடப்பட்ட தினப் புத்தகம் 4493இன் கீழ் பதிவு செய்யப்பட்ட பகிரங்க நொத்தாரிசு G.H.S.V. ஜயவர்தனவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2021 செப்டெம்பர் 17ஆம் திகதியிடப்பட்ட விசேட அற்றோர்ணி தத்துவ இலக்கம் 340 ஐ இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறிவிக்கிறேன்.

**விக்ரமாரச்சிகே தொன் ஜானக சஞ்சீவ**



# இலங்கை வங்கி

## இலங்கை வங்கி ஓய்வூதிய நிதியங்களின் வருடாந்த பொதுக்கூட்டத்தினது ஒத்திவைப்பு அறிவிப்பு

2022.07.09ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த பின்வரும் ஓய்வூதிய நிதியங்களின் வருடாந்த பொதுக்கூட்டங்கள் நாட்டின் தற்போதைய நிலைமை காரணமாக தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனை தயவுடன் அறியத்தருகிறோம். இக்கூட்டங்கள் மீண்டும் இடம்பெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

குமாரி ஜயசிங்க - செயலாளர்

இலங்கை வங்கி ஓய்வூதிய நம்பிக்கை நிதியம் - 2014
இலங்கை வங்கி விதவைகள்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் - 2014
இலங்கை வங்கி சேமலாப நிதியம்
இலங்கை வங்கி ஓய்வூதிய நம்பிக்கை நிதியம்
இலங்கை வங்கி விதவைகள்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம்

**ஓய்வூதிய திணைக்களம்**
25 ஆம் மாடி,
இலங்கை வங்கி தலைமையகம்,
BOC சதுக்கம்,
இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
தொலைபேசி/தொலைநகல் : 0112544316
மின்னஞ்சல் : agmsup@boc.lk/bocsup@boc.lk

*2022.07.06*

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்



இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# ஏல விற்பனை அறிவித்தல்
# இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

இல. 131A, அனகாரிக தர்மபால மாவத்தை, தெஹிவளை என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. ஏக்கநாயக்க முதியான்சேலாகே மஹிந்த பண்டாரநாயக்க மற்றம் திருமதி லியனாராச்சிகே (துஷாந்தி எனும்) துஷ்யந்தி ரேணுகா முணசிங்ஹ பண்டாரநாயக்க ஆகியோர் ஈடுவைத்த ஆதனம்.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2019.08.09ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியிட்டப்பட்ட 2136ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.07.24ஆம் திகதி தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவையிலுள்ள முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட சொத்தையும் நிலமனையையும் இல. 182/3 (50/3), விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் துசித்த கருணாரத்ன அவர்கள் 2022.08.26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இலங்கை வங்கி கம்பஹா கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

1. மேல் மாகாணம் கம்பஹா மாவட்டம் அலுத்குரு கோரளை ராகம்பற்றுவவில் கம்பஹா மெதகமயில் அமைந்த கேதலவல பில்லேவ மற்றும் ஹல்கஹபில்லேவ என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் டீ.ரீ.ஏ.ஜ. திசாநாயக்க தயாரித்த 24.02.2010 திகதியிட்ட வரைபடம் இல.219ல் துண்டு B என விபரித்த பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு வடக்கில் எல மற்றும் துண்டு Aம், கிழக்கில் துண்டுகள் A மற்றும் Cம், தெற்கில் பாதையும், மேற்கில் ரஞ்சித் குமார இலங்கசிங்ஹவின் காணியும் என்.எம். திசாநாயக்கவின் காணியும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் எட்டு தசம் ஆறு பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0.று1.பே8.60) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

2. மேல் மாகாணம் கம்பஹா மாவட்டம் அலுத்குரு கோரளை ராகம்பற்றுவவில் கம்பஹா மெதகமயில் அமைந்த கேதலவல பில்லேவ மற்றும் ஹல்கஹபில்லேவ என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் டீ.ரீ.ஏ.ஜ. திசாநாயக்க தயாரித்த 24.02.2010 திகதியிட்ட வரைபடம் இல.219ல் துண்டு C என விபரித்த பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு வடக்கில் துண்டு Aம், கிழக்கில் எஸ். பிரியலால் பத்திரணவின் காணியும் சந்தன இலங்கசிங்ஹவின் காணியும், தெற்கில் பாதையும், மேற்கில் துண்டு Bம் எல்லைகளாகக் கொண்டு மூன்று தசம் நான்கு பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0.று0.பே3.40) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

**மேற்குறிப்பிட்ட காணிகள் கீழ் விபரித்த காணியின் பிரிக்கப்பட்ட பாகங்களாகும்.**

மேல் மாகாணம் கம்பஹா மாவட்டம் அலுத்குரு கோரளை ராகம்பற்றுவவில் கம்பஹா மெதகமயில் அமைந்த கேதலவல பில்லேவ மற்றும் ஹல்கஹபில்லேவ என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் சீ.எல். விக்ரமநாயக்க தயாரித்த 28.09.1964 திகதியிட்ட வரைபடம் இல.161/64ல் என விபரித்த பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு வடக்கில் எலயும், கிழக்கில் D.B.P. ஜயவர்தன மற்றும் ஏனையோருக்குச் சொந்தமான காணியும், தெற்கில் எஸ்.ஏ.டயஸ் சிங்கோவின் நெல்வயலும், மேற்கில் என்.எம். திசாநாயக்க நோனாவின் காணியும் எல்லைகளாகக் கொண்டு இரண்டு றூட் இரண்டு பேர்ச்சுகள் (ஏ0.றூ2.பே2) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது கம்பஹா காணிப்பதிவகத்தில் பக்கம் G41/82ல் பதிவு செய்யப்பட்டுள்ளது

**மீளளவை செய்துள்ள இக்காணி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.**

மேற்குறிப்பிட்ட கம்பஹா மெதகமயில் அமைந்த கேதலவல பில்லேவ மற்றும் ஹல்கஹபில்லேவ என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஆர்.எம்.ஜே. ரணசிங்ஹ தயாரித்த 06.06.1994 திகதியிட்ட வரைபடம் இல. 994ல் துண்டு 1 என விபரித்த பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு வடக்கில் எலயும், கிழக்கில் திரு. D.B.P.ஜயவர்தனவும் ஏனையோரும் தற்சமயம் பீ.கருணாரத்ன உரிமை கோரும் காணியும், தெற்கில் கே.ஏ.டயஸ் சிங்யோ உரிமை கோரும் நெல்வயலும் மேற்குறிப்பிட்ட அளவையாளர் தயாரித்த வரைபடம் இல.804ல் விபரித்த காணியும், மேற்கில் திருமதி. என்.எம். திசாநாயக்க உரிமைகோரும் காணியும் எல்லைகளாகக் கொண்டு இரண்டு றூட் இரண்டு பேர்ச்சுகள் (ஏ0.றூ2.பே2) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

3. மேல் மாகாணம் கம்பஹா மாவட்டம் கம்பஹா மாநகரசபை எல்லைகளுள் அலுத்குரு கோரளை ராகம்பற்றுவவில் கம்பஹா மெதகமயில் அமைந்த தெஹிகஹகும்புர மற்றும் ஹல்கஹகும்புர என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் டப்ளியூ.ஏ.யூ. செனரத் தயாரித்த 07.10.2004 திகதியிட்ட வரைபடம் இல.2681ல் துண்டு E என விபரித்த பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு வடக்கில் மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டுகள் B மற்றும் Dம், கிழக்கில் மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு Fம், தெற்கில் துண்டு F மேற்கில் எலயும் எல்லைகளாகக் கொண்டு முப்பத்தேழு தசம் ஒன்று பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே37.10) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது கம்பஹா காணிப்பதிவகத்தில் பக்கம் G49 162ல் பதிவு செய்யப்பட்டுள்ளது

**மீளளவை செய்துள்ள இக்காணி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.**

மேற்குறிப்பிட்ட கம்பஹா மெதகமயில் அமைந்த தெஹிகஹகும்புர மற்றும் ஹல்கஹகும்புர அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஜே.பீ.என். ஜயசுந்தர தயாரித்த 22.10.2007 திகதியிட்ட வரைபடம் இல.6846ல் துண்டு 1 என விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் பாதையும் (MC), கிழக்கில் வீர ஒழுங்கையும், தெற்கில் பாதையும், மேற்கில் E.M.M. பண்டார நாயக்க உரிமைகோரும் காணியும் எல்லைகளாகக் கொண்டு முப்பத்தேழு தசம் ஒன்று பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே37.10) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.

**எஸ்.கே. கஜநாயக்க**
**பிரதான முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**மேற்தரக்கிளை, கண்டி.**



இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# ஏல விற்பனை அறிவித்தல்
# இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

1. கடன் தொடர்பு இல. 80941242

நிக்கவெரட்டிய மஹ எல வீதி, ரங்கிரி அரிசி ஆலை என்னும் முகவரிச் சேர்ந்த திரு. தென்னகோன் முதியான்சேலாகே சுகதபால தென்னகோன் (ரங்கிரி அரிசி ஆலை பங்காளர்கள்) ஈடு வைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 02.11.2018ஆம் திகதி 2096ஆம் இலக்க வர்த்தமானியிலும் 17.10.2018ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 24, டொரிங்டன் வீதி, கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் சொக்மன் & சமரவிக்ரம ஏல நிறுவனத்தின் ஏலதாரர் 30.08.2022ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே BOC நிகவெரட்டிய கிளை வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வன்னி ஹத்பற்று மாகுல் ஓதொட்ட கோரளையில் நிக்கவெரட்டிய பிரதேசசபை எல்லைகளுள் நிக்கவெரட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் நிக்கவெரட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் நிக்கவெரட்டிய கிராமத்தில் அமைந்த **"கோன்கஹமுலஹேன"** என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் B.G. பந்துதிலக்க தயாரித்த 25.07.2016 திகதியிட்ட வரைபடம் இல.6378/2016ல் **துண்டு 1** என விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் T.M.P. ரண்ஹாமி மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணியும், கிழக்கில் நிக்கவெரட்டிய ஆஸ்பத்திரி காணியும் வரைபடம் இல.24/86ல் துண்டு 1 என விபரித்த அதே காணியின் மீதிப்பாகமும், தெற்கில் ஓடைக்கு ஒதுக்கப்பட்டிருப்பதும் டிங்கிரி அம்மா உரிமைகோரும் காணியும், மேற்கில் பண்டார மெனிகே உரிமைகோரும் காணியும் டிங்கிரி அம்மா உரிமைகோரும் காணியும் எல்லைகளாகக் கொண்டு **இரண்டு ஏக்கர் ஆறு பேர்ச்சுகள் (ஏ2.றூ0.பே6)** விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட காணி கீழே விபரித்த காணியின் ஒரு மீளளவை ஆகும்.

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வன்னி ஹத்பற்று மாகுல் ஓதொட்ட கோரளை நிக்கவெரட்டிய பிரதேசசபை எல்லைகளுள் நிக்கவெரட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் நிக்கவெரட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் நிக்கவெரட்டிய கிராமத்தில் அமைந்த **"கோன்கஹமுலஹேன"** என அழைக்கப்படும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.M.திசாநாயக்கா தயாரித்த 07.11.1998 திகதியிட்ட வரைபடம் இல.6830ல் **துண்டு 1** என விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் T.M.P.ரண்ஹாமி மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணியும், கிழக்கில் நிக்கவெரட்டிய ஆஸ்பத்திரி காணியும் வரைபடம் இல.24/86ல் துண்டு 1 என விபரித்த அதே காணியின் மீதிப்பாகமும், தெற்கில் வேல்லயும், மேற்கில் பண்டார மெனிகே உரிமைகோரும் காணியும் டிங்கிரி அம்மா உரிமைகோரும் காணியும் எல்லைகளாகக் கொண்டு **இரண்டு ஏக்கர் ஆறு பேர்ச்சுகள் (ஏ2.றூ0.பே6)** விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட காணி கீழே விபரித்த காணியின் ஒரு மீளளவை ஆகும்.

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வன்னி ஹத்பற்று மாகுல் ஓதொட்ட கோரளையில் நிக்கவெரட்டிய பிரதேசசபை எல்லைகளுள் நிக்கவெரட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் நிக்கவெரட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் நிக்கவெரட்டிய கிராமத்தில் அமைந்த **"கோன்கஹமுலஹேன"** என அழைக்கப்படும் காணியின் பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் T.M.P. ரண்ஹாமி மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணியின் வேலியும், கிழக்கில் நிக்கவெரட்டிய ஆஸ்பத்திரி காணியின் வேலியும் அதே காணியின் மீதிப்பாகமும், தெற்கில் வேல்லயும், மேற்கில் R.M.P.கிரிபண்டா மற்றும் A.M.புஞ்சி பண்டா உரிமைகோரும் காணியின் வேலியும் எல்லைகளாகக் கொண்டு **இரண்டு ஏக்கர் ஆறு பேர்ச்சுகள் (ஏ2.றூ0.பே6)** விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது நிக்கவெரட்டிய காணிப்பதிவகத்தில் A80/254ல் பதிவுசெய்து A80/275க்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.**

**திரு. வீ.ஏ.ஆர்.பீ. விதானாரச்சி**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**நிகவெரட்டிய.**



இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# ஏல விற்பனை அறிவித்தல்
# இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

**கம்பளை, போதலபிட்டிய, தேவராஜ மாவத்தை, இல. 4/1B - 1/1ஐச் சேர்ந்த திரு. சிசிர குமார காமினி சரத்சந்ர மற்றும் திருமதி தியாகு படதுருகே சந்திம தி சில்வா மற்றும் கம்பளை, போதலபிட்டிய, தேவராஜ மாவத்தை, இல. 41G ஐச் சேர்ந்த திருமதி சிரியா குமாரி சரத்சந்ர ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.**

**தொடர்பு : 575/Recovery/Sarachchandra/2022**

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 08.02.2019ஆம் திகதி 2110ஆம் இலக்க வர்த்தமானியிலும் 22.01.2019ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 182/3, (50/3), விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T & H ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2022.08.29ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

1. மத்திய மாகாணம் கண்டி மாவட்டம் கம்பளை பதிவுப் பிரிவில் உடபலாத்தை கங்கபஹல கோரளையில் கம்பளை பட்டின சபை எல்லைகளுள் நகரத்தினுள் உடபலாத்த பிரதேச செயலகப் பிரிவில் போதலப்பிட்டிய 1109ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் வட்டாரம் இல. 01ல் கஹட்டபிட்டியவில் அமைந்த தேவராஜ மாவத்தை வரி மதிப்பு இல. 4ஐக் கொண்ட போதலபிட்டியவத்த என அழைக்கும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் S. M. அபேரத்ன தயாரித்த 1999.07.24 திகதியிட்ட வரைபடம் இல. 1828ல் விபரித்த துண்டு 7 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட காணித்துண்டு **வடக்கில்** மேற்கூறிய வரைபடம் இல. 1828ல் துண்டுகள் 2, 3, 5 மற்றும் 6ம், கிழக்கில் வரி மதிப்பு இல. 10B ஐக் கொண்ட நிலமனையும் 10C பாரதொட்ட பாதையும், **தெற்கில்** பதலவத்தையை பிரிக்கும் உயிர் வேலியும் கம்பி வேலியும், **மேற்கில்** தேவராஜ மாவத்தை வரி மதிப்பு இலக்கம் 4/5ஐக் கொண்ட மீதிப்பாகத்தை பிரிக்கும் உயிர்வேலியும் கம்பி வேலியும் எல்லைகளாகக் கொண்டு **பதினான்கு தசம் பூச்சியம் ஐந்து பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே14.05) அல்லது ஹெக்டெயர்கள் பூச்சியம் தசம் பூச்சியம் மூன்று ஐந்து ஐந்து நான்கு (ஹெக்டெயர்கள் 0.03554)** விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண். மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1828ல் துண்டு 6 என அடையாளமிட்ட கிணற்றிலிருந்து ஏனைய அதிகாரமுள்ள பாவனையாளருடன் பொதுவாக கிணற்றில் நீர் எடுப்பதற்கு உரிமையும் ஆகும். இது **கம்பளை** காணிப்பதிவகத்தில் **E 24/04ல்** பதிவு செய்யப்பட்டது.

2. மேற்குறிப்பிட்ட கஹட்டபிட்டியவில் அமைந்த தேவராஜ மாவத்தை வரி மதிப்பு இல. 4ஐக் கொண்ட **போதலபிட்டியவத்த** என அழைக்கப்படும் காணியின் ஒரு பாகம் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1828ல் விபரித்த **துண்டு 3** என அடையாளமிட்ட எட்டு அடி அகல பிரவேசம் மீது ஏனைய அதிகாரம் பெற்ற பாவனையாளருடன் அன்பளிப்பைப் பெற்றோரும் அவரால் மேலே கூறப்பட்டோரும் பொதுவாக பாதையை பிரவேசிப்பதற்கான உரிமையும் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1828ன் படி **வடக்கில்** துண்டு 1ம், **கிழக்கில்** துண்டு 4, 5 மற்றும் 6ம், **தெற்கில்** துண்டு 7ம், **மேற்கில்** துண்டு 2ம் எல்லைகளாகக் கொண்டு **ஒன்று தசம் நான்கு பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.1.40) அல்லது ஹெக்டெயர்கள் பூச்சியம் தசம் பூச்சியம் பூச்சியம் மூன்று ஐந்து நான்கு (ஹெக்டெயர்கள் 0.00354)** விஸ்தீரணமுடையது. அத்துடன் வரைபடம் இல. 1828ல் 8 அடி அகல பாதைக்கு ஒதுக்கிய துண்டு 1 மீதான பொது வழி உரிமையும் ஆகும். இது கம்பளை காணிப்பதிவகத்தில் **C178/37**ல் பதிவு செய்யப்பட்டது.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.**

**திருமதி M.G.K.P. விமலசேன**
**சிரேஷ்ட முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**மேற்தரக்கிளை, கம்பளை.**

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆனி மாதம் 23ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்ஹிஜ்ஜஹ் பிறை 07

### குறள் தரும் சிந்தனை



கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்கொட்கின்
எற்றா விழுமந் தரும்

ஒரு செயலை முடிவில் வெளிப்படுத்துவதே ஆளுமை, இடையிலேயே வெளிப்படுத்தினால் அது செயலைச் செய்பவனுக்கு நீங்காத துன்பத்தைத் தரும்.

# விவசாயிகளின் வேதனைகளை தணிக்கும் வகையிலான தீர்மானம்

இலங்கை தற்போது பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள போதிலும், அந்நெருக்கடிகள் மக்களுக்கு தாக்கமாகவும் சுமையாகவும் பாதிப்பாகவும் அமைவதைக் குறைத்து கட்டுப்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு பரந்த அடிப்படையிலான நடவடிக்கைகளும் வேலைத்திட்டங்களும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.

அந்த வகையில் பொருளாதார நெருக்கடி நிலவி வருகின்ற சூழலிலும் கூட, நாட்டு மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி பல தீர்மானங்களும் முடிவுகளும் எடுக்கப்பட்டு செயலுருப்படுத்தப்பட்டு வருகின்றன. பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் அரசாங்கம் முன்னெடுக்கின்ற வேலைத்திட்டங்களும் நடவடிக்கைகளும் மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டு வருவதை வெளிப்படுத்தி நிற்கின்றன.

இந்நிலையில் அரசாங்கம் மற்றொரு முக்கிய தீர்மானத்தை தற்போது எடுத்திருக்கின்றது. அதுதான் நெற்கைக்காக விவசாயிகள் பெற்றுக் கொண்டுள்ள கடனை மீள அறவிட முடியாத கடனாக தள்ளுபடி செய்வதற்கான தீர்மானமாகும். இவ்வாறான ஒரு தீர்மானம் கடந்த செவ்வாய்க்கிழமை கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டிருப்பதை அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில், அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் பந்துல குணவர்தன உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கின்றார்.

அரசாங்கத்தின் இத்தீர்மானமானது நெற்செய்கைக்காக கடன் பெற்றுள்ள விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து விவசாயிகளுக்கும் ஆறுதலானதும் நம்பிக்கை அளிக்கக் கூடியதுமான செய்தியாகும். இத்தீர்மானத்தை விவசாயிகள் பெரிதும் வரவேற்றுள்ளனர். இந்நாட்டு விவசாயிகள் வழமை போன்று பசளையைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு முகம் கொடுத்துள்ளனர். நாடு எதிர்கொண்டுள்ள அந்நிய செலாவணி பற்றாக்குறையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார நெருக்கடியே இதற்கு மூலகாரணமாக விளங்குகின்றது.

இதன் விளைவாக கடந்த பெரும்போகம் மற்றும் சிறுபோகச் செய்கைகளில் விவசாயிகள் உரிய முறையில் ஈடுபடவும் இல்லை. பயிர்ச்செய்கையை மேற்கொண்டவர்களுக்கு உரிய விளைச்சலும் கிடைக்கப் பெறவில்லை. பயிர்ச்செய்கைக்கு பொருத்தமான மண்வளமும் சீதோஷண நிலையும் இயற்கையாகவே காணப்படும் இந்நாட்டில், இவ்வாறான நெருக்கடியை விவசாயிகள் இப்போதுதான் எதிர்கொண்டிருக்கின்றனர். இப்பிரச்சினையானது விவசாயிகள் மத்தியில் கவலையையும் மனஉளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளது.

இவை இவ்வாறிருக்க, நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடி எல்லா மட்ட மக்களதும் அன்றாட வாழ்வில் தாக்கங்களையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தவே செய்திருக்கின்றது. அவர்களில் விவசாயிகளும் உள்ளடங்கியுள்ளனர். இந்த நிலையில் பயிர்ச்செய்கைக்குத் தேவையான பசளையைப் பெற்றுக் கொள்வதில் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், அதனை அடிப்படையாகக் கொண்ட பின்விளைவுகள் மற்றும் பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கள் போன்றவாறான காரணங்களினால் பெற்ற கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்கு நெற்செய்கை விவசாயிகள் முகம் கொடுத்துள்ளனர். இதனை அறவிட முடியாத கடனாக கருதும் நிலைமையும் வங்கிகளுக்கு ஏற்பட்டுள்ளன.

ஏற்கனவே கடன் பெற்று இருப்பதால் விவசாயத்திற்கென மீண்டும் கடன் பெற முடியாத நிலைக்கு விவசாயிகள் உள்ளாகியுள்ளனர். நெற்செய்கைக்காக கடன் பெற்றுள்ள விவசாயிகள் முகம் கொடுத்துள்ள இவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்திய அரசாங்கம், இந்த முற்போக்கான தீர்மானத்தை எடுத்திருக்கின்றது. உண்மையில் இது தேவையான நேர காலத்தில் எடுக்கப்பட்டிருக்கும் பாராட்டத்தக்க தீர்மானமாகும். இது விவசாயிகளின் நலன்களை முன்னிலைப்படுத்தி எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்க முடியாது. இத்தீர்மானம் விவசாயத்தில் நம்பிக்கை இழந்துள்ள விவசாயிகள், அத்துறையில் நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் ஈடுபட வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதாகவே அமைந்திருக்கின்றது.

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள சூழலில், உணவுப் பயிர்ச் செய்கையில் விவசாயிகள் நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் ஈடுபடுவது அவசியம். அதற்கான ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட வேண்டும். இவற்றுக்கு இக்கடன் தள்ளுபடி தீர்மானம் பக்கபலமாக அமையுமென உறுதிபடக் கூற முடியும்.

ஆகவே உணவுப் பயிர்ச்செய்கையில் விவசாயிகள் நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் ஈடுபடும் போது, நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியின் பெரும்பாலான தாக்கங்களையும் பாதிப்புக்களையும் குறைத்து தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அதனால் இவ்வாறான விடயங்களில் கவனத்தை குவித்து நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய தேவை பரவலாக உணரப்பட்டுள்ளது. அவை காலத்திற்கு அவசியமான தேவை என்பதில் ஐயமில்லை.

editor.tkn@lakehouse.lk

# கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக ஜனநாயகத்தில் நம்பிக்கை இழக்கும் அரேபியர்கள்

## கருத்துக் கணிப்பில் வெளியான அதிர்ச்சித் தகவல்!



மத்திய கிழக்கு, வடஆபிரிக்காவில் உள்ள 9 நாடுகள் மற்றும் பாலஸ்தீன பிரதேசங்களில் பொருளாதார நெருக்கடி காரணமாக அங்கு வாழும் அரேபியர்கள் உட்பட அனைத்து மக்களும் ஜனநாயகத்தில் நம்பிக்கை இழந்து வருகின்றனர் என்ற அதிர்ச்சி கருத்துக் கணிப்பு வெளியாகி உள்ளது.

மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்காவில் பொருளாதார நெருக்கடி நிலவி வருகிறது. இதுதொடர்பாக லெபனான், சூடான், துனிசியா, ஜோர்டான், ஈராக், லிபியா, மவுரிட்டானியா, மொராக்கோ, எகிப்து ஆகிய 9 நாடுகளிலும் பாலஸ்தீன பிரதேசங்களிலும் கருத்துக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.


பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தை மையமாக கொண்ட Arab Barometer எனும் ஆராய்ச்சி அமைப்பானது 2006 ஆம் ஆண்டு முதல் பல்வேறு கருத்துக் கணிப்பீடுகளை மேற்கொண்டு வருகிறது. இந்த அமைப்பு பொருளாதார நெருக்கடியை சந்தித்து வரும் நாடுகளில் மொத்தம் 22,765 பேரை நேரடியாக நேர்க்காணல் செய்துள்ளது. இதற்கு பல வளைகுடா அரசுகள் ஒத்துழைப்பு வழங்கவில்லை. இதனால் சிரியாவில் கருத்துக் கணிப்பீடு மேற்கொள்ள முடியவில்லை. ஒவ்வொரு நாட்டின் சட்டம், கலாசார காரணங்களுக்காக சில கேள்விகள் கைவிடப்பட்டன.

2021ஆம் ஆண்டில் பிற்பகுதியில் இருந்து 2022 வசந்தகாலம் வரை கணிப்பீடு நடத்தப்பட்டது. பல்கலைக்கழகங்கள் மற்றும் வாக்கெடுப்புகளை நடத்தும் அமைப்புகளுடன் இணைந்து பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டன. இதில் தற்போதைய ஜனநாயகத்தின் கீழ் பொருளாதாரம் பலவீனமாக உள்ளது என பெரும்பாலானோர் ஏற்றுக் கொண்டனர். இதுபற்றி அதன் இயக்குனர் மைக்கேல் ரொபின்ஸ் கூறுகையில், "கடந்த 2018_19 கருத்துக் கணிப்பீட்டுடன் ஒப்பிடும் போது இது முற்றிலும் மாறியுள்ளது. ஜனநாயகம் என்பது அரசாங்கத்தின் சரியான வடிவம் அல்ல. அது எல்லாவற்றையும் சரி செய்யாது என கூறும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மக்கள் பட்டினி கிடக்கின்றனர். மக்களுக்கு ரொட்டி தேவையாக உள்ளது. மக்கள் தற்போதைய அமைப்பினால் விரக்தி அடைந்துள்ளமை தெரியவந்துள்ளது" என்றார்.

மேலும் கணிப்பீடு நடத்தப்பட்ட நாடுகளில் பதிலளித்தவர்களில் பாதிக்கும் அதிகமானவர்கள் ஜனநாயக அமைப்பின் கீழ் பொருளாதாரம் பலவீனமாக உள்ளது என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர். மேலும் அவர்கள் தங்கள் நாட்டு அரசின் கொள்கைகளின் செயல்திறனை காட்டிலும் அரசின் செயல்பாடு மீது அதிக அக்கறை கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். ஜனநாயக அமைப்பின் கீழ் பொருளாதாரம் பலவீனமாக இருப்பதை ஒப்புக்கொண்ட மக்களின் எண்ணிக்கையானது 2018_19 கணிப்பீட்டு முடிவுகளை ஒப்பிடும் போது தற்போது அதிகரித்துள்ளது.

அதன்படி 2018_19 கணிப்பீட்டில் ஈராக்கில் 50 சதவீதமாக இருந்த அளவு தற்போது 75 சதவீதமாகவும், துனிசியாவில் 35 சதவீதமாக இருந்தது தற்போது 70 சதவீதத்துக்கு அதிகமாகவும், பாலஸ்தீன பிரதேசங்களில் 30 சதவீதமாக இருந்தது தற்போது 60 சதவீதமாகவும், லிபியாவில் 30 சதவீதமாக இருந்தது தற்போது 55 சதவீதத்துக்கு அதிகமாகவும் உயர்ந்துள்ளது. ஜோர்டானில் 25 சதவீதத்தில் இருந்து 50 சதவீதமாகவும், லெபனானில் 30 சதவீதத்தில் இருந்து 50 சதவீதத்துக்கு அதிகமாகவும், சூடானில் 33 சதவீதத்தில் இருந்து 50 சதவீதமாகவும், மொராக்கோவில் 10 சதவீத்தில் இருந்து 45 சதவீதமாகவும் ஜனநாயக அமைப்பின் கீழ் பொருளாதாரம் பலவீனமாக இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்காவுக்கு சிகிச்சைக்காக சென்ற ராஜேந்தர் குணமடைந்தார்



பிரபல இயக்குநரும், நடிகருமான டி.ராஜேந்தர் உடல் நலம் குன்றிய நிலையில் மேல் சிகிச்சைக்காக சமீபத்தில் அமெரிக்கா அழைத்துச் செல்லப்பட்டார். தற்போது அவருக்கு சிகிச்சை முடிந்த நிலையில் பூரணமாக குணமடைந்துள்ளார்.

சென்னையில் திடீரென சுகவீனமுற்ற அவருக்கு வயிற்றில் சிறிய இரத்தக் கசிவு ஏற்பட்டுள்ளதாகவும், அவருக்கு உயர் சிகிச்சை தர வேண்டும் எனவும் மருத்துவர்கள் அறிவுறுத்தினார்கள். மேல் சிகிச்சைக்காக வெளிநாட்டுக்கு கொண்டு செல்ல மருத்துவர்கள் அறிவுறுத்திய நிலையில், நடிகர் சிம்பு அதற்கான ஏற்பாடுகளை முன்னின்று கவனித்துக் கொண்டார்.

இதையடுத்து அமெரிக்காவுக்கு டி.ராஜேந்தர் அழைத்துச் செல்லப்பட்டார். வெளிநாட்டு மருத்துவமனையில் அவருக்கு மேல் சிகிச்சை தரப்பட்டது. சிகிச்சை வெற்றிகரமாக முடிந்த நிலையில், தற்போது முழுமையாக டி.ராஜேந்தர் குணமடைந்துள்ளார். மருத்துவர்கள் அவர் ஓய்வெடுக்க வேண்டுமென அறிவுறுத்தியதால், அங்கேயே ஒரு மாதம் தங்கலாம் என குடும்பத்தினர் முடிவெடுத்துள்ளனர். செப்டம்பர் 15 ஆம் திகதி சிம்புவின் 'வெந்து தணிந்தது காடு' படம் வெளியாகும் சமயத்தில் சென்னைக்குத் திரும்பவும் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதுவரையிலும் உடனிருந்து, அனைத்துப் பணிகளையும் முன்னின்று கவனித்துகொண்ட நடிகர் சிம்பு தன் தந்தை ஒரு மாதம் வெளிநாட்டில் ஓய்வெடுப்பதற்கான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து விட்டு, தற்போது படப்பிடிப்பிற்காக சென்னை திரும்பியுள்ளார். உடல்நிலை குணமடைந்த நிலையில், தற்போது முழு ஓய்வெடுத்து வருகிறார் டி.ராஜேந்தர். அப்பாவை அங்கே விட்டு விட்டு வந்த நிலையில், நேற்றுமுன்தினம் இரவு தந்தையுடன் இருக்கும் சிறு வயது போட்டோவை சிம்பு பதிவிட்டு இருந்தார்.

# உலக வங்கியின் நிதியுதவியில் மூன்று மாதங்களுக்கு மானியம்



தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக, வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதால் தற்போது அமுலிலுள்ள நலனோன்பு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் சமுர்த்தி நலனுதவி பெற்று வரும் குடும்பங்கள் மற்றும் சமுர்த்தி காத்திருப்புப் பட்டியலிலுள்ள குடும்பங்களுக்கு உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் மூன்று மாதங்களுக்கு மானியம் வழங்குவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.



இத்திட்டத்திற்கமைய, அம்பாறை மாவட்டம், இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட இறக்காமம் சமுர்த்தி வங்கியினால் சமுர்த்தி நன்மை பெற்று வரும் குடும்பங்களுக்கான குறித்த மானியத் தொகை வழங்கும் நிகழ்வு ஆரம்பம் செய்து வைக்கப் பட்டது.

இறக்காமம் சமுர்த்தி வங்கியில் மாதாந்தம் மானியம் பெற்றும் வரும் சுமார் 1800 குடும்பங்களும், சமுர்த்தி காத்திருப்புப் பட்டியலிலுள்ள 849 குடும்பங்களும் இதன் மூலம் நன்மையடையவுள்ளன.

சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் ரீ.கே. றஹ்மத்துல்லா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதேச செயலாளர் எம்.எஸ். எம்.றஸ்ஸான், உதவி பிரதேச செயலாளர் எம். ஏ.சி.அகமட் நஸீல், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.சி.எம். தஸ்லீம், முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.செல்வகுமார், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் பிரியந்தி வேரகொட மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

**றிசாத் ஏ. காதர்...**
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவருக்கான வாழ்க்கைத்திறன் வழிகாட்டல்

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான வாழ்க்கைத்திறன் வழிகாட்டல் எனும் தலைப்பில் நடைபெற்ற இரண்டு நாள் வதிவிடப் பயிற்சி நெறியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பாலமுனை ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் மண்டபத்தில் நடைபெற்றது.



அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் பாலமுனை ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் அனுசரணையில் பாலமுனை மின்ஹாஜ் தேசிய பாடசாலை கூட்ட மண்டபத்தில் நடைபெற்ற இரண்டு நாள் வதிவிடப் பயிற்சி நெறியில், பாலமுனை மின்ஹாஜ் தேசிய பாடசாலை மற்றும் பாலமுனை ஹிக்மா வித்தியாலய மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கை மதித்தல், உயர்கல்வி வழிகாட்டல் தொழிநுட்பத்துறை, கலைத்துறை மற்றும் வணிகத்துறையும் தனது சுயகற்றல் அனுபவமும், தலைமைத்துவம், பெற்றோரை மதித்தல், பதின்ம பருவத்தை விளங்கிக் கொள்ளலும் கையாளுதலும், சாதாரணதரப் பரீட்சையின் பின்னரான அடுத்தகட்ட நடவடிக்கை, மருத்துவத்துறையும் தனது சுயகற்றல் அனுபவமும், ஒரு முஸ்லிமின் வாழ்வில் தொழுகை, இளமைப் பருவம் பற்றிய இஸ்லாமிய நோக்கு, இலக்கமைத்தல், போன்ற பல்வேறு தலைப்புக்களில் இந்த இரண்டு நாள் பயிற்சி இடம்பெற்றது.

தற்போது கூடுதலாக சட்டவிரோத மற்றும் சமூகவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களை நோக்கும் போது பாடசாலை செல்கின்றவர்கள் இளவயதினர் போன்றோரை அடையாளம் காணக் கூடியதாக இருக்கின்றது. இந்த செயற்பாட்டிலிருந்து எதிர்கால மாணவர் சமூகத்தை பாதுகாத்து விழிப்பூட்டும் வகையிலும், எமது நாட்டில் போதைப்பொருள் பாவனையினால் ஏற்படும் சமூக சீர்கேடுகளை இல்லாதொழித்து சிறந்ததொரு நாட்டையும் சமூகத்தையும் கட்யெழுப்பி சிறந்த கல்வியலாளர்கள் சமூகவாதிகளை உருவாக்க வேண்டும் என்கின்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையிலும் இப்பயிற்சி செயலமர்வு இடம்பெற்றது.

மின்ஹாஜ் தேசிய பாடசாலையின் அதிபர் கே.எல்.உபைதுள்ளா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேல்நீதிமன்ற நீதவான் அல்ஹாபிழ் என்.எம்.அப்துல்லா பிரதம அதிதியாகவும் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றகுமத்துள்ளா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜி.பஸ்மில் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், பாலமுனை ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தலைவர் யு.எல்.லத்தீப், அகில இலங்கை ஜெம்மியத்துல் உலமா சபையின் பிரதித் தலைவர் மௌலவி ஐ.எல்.எம்.ஹாசிம் (மதனி), தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்களான கலாநிதி யு.எல்.ஏ.மஜீத், ஏ.எல்.ஐயுப், உளவளத்துணையாளர் எஸ். ஆப்தீன் உட்பட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், உலமாக்கள், உளவளத்துணை உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இறுதி நாள் நிகழ்வில் மாணவர்களை ஊக்குவிக்கும் செயற்பாட்டின் கீழ் பாலமுனை வரலாற்றில் முதன் முதலாக மகப்பேற்று வைத்திய நிபுணராக தெரிவு செய்யப்பட்டுள்ள வைத்தியர் ஏ.எல்.சுதைஸை பாராட்டி பாலமுனை ஜீம்ஆப் பெரிய பள்ளிவாசல் நிருவாகமும் மின்ஹாஜ் தேசிய பாடசாலை அதிபர் தலைமையிலான நிருவாகமும் நினைவுச்சின்னம் வழங்கி பாராட்டி கௌரவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**ஐ.ஏ.ஸிறாஜ்...**
(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

# அனைத்து இனங்களின் உணர்வுக்கு மதிப்பளித்து புனித ஹஜ்ஜு பெருநாளைக் கொண்டாடுவோம்!

**புனித ஹஜ் கடமையானது இஸ்லாத்தில் ஐந்தாவது கடமையாகும். வசதி படைத்த செல்வந்தர்களுக்கு மட்டுமே கடமையாக்கப்பட்டுள்ளது. வசதி படைத்த செல்வந்தர்கள் அனைவரும் கண்டிப்பாக புனித ஹஜ்ஜை நிறைவேற்றியாக வேண்டும். சக்தியிருந்தும் புனித ஹஜ்ஜை நிறைவேற்றாமலிருப்பது பெரும் குற்றமாகும்.**

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றும் போது நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் குடும்பமே நம் மனக்கண் முன் நிழலாடும். இஹ்ராம் கட்டுதல், கஃபாவை வலம் வருதல், ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடல், ஸபா, மர்வா மலைகளுக்கிடையில் ஓடுதல், புனிதம் நிரம்பிய ஸம்ஸம் நீர் அருந்துதல், அரபாவில் தரித்தல், குர்பான் கொடுத்தல், மினாவில் கல்லெறிதல் போன்ற அனைத்து கிரியைகளிலும் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாகம் பிரதிபலிக்கின்றது.

ஹஜ்ஜுக்கான ஒன்றுகூடல், முஸ்லிம் உம்மத்தின் ஐக்கிய உணர்வை பறைசாற்றும் சர்வதேசளவிலான வருடாந்த மாநாடாக கணிக்கப்படுகிறது. தொழுகையில் ஆரம்பிக்கும் முஸ்லிம் உம்மத்தின் ஐக்கியமும் ஒருமைப்பாடும் ஹஜ் ஒன்றுகூடலில் மேலும் வலுப்பெறுகிறது.

நபி (ஸல்) அவர்களின் வருகைக்கு முன் வாழ்ந்த ஜாஹிலிய்யா காலத்து மக்கள் கூட இவ்வழிபாட்டில் ஈடுபட்டு வந்தனர். நபி (ஸல்) அவர்களின் வருகைக்குப் பின் வருடாந்தம் ஒன்றுகூடும் சர்வதேச இஸ்லாமிய சமத்துவமும் சகோதரத்துவமும் உள்ளடக்கிய மாநாடாக அமையப்பெற்றது.

அல்லாஹ்வின் கட்டளையை இதயத்தில் இறுக்கமாய் கொண்டு, எத்தனையோ காலங்களாக "இல்லையே தமக்கொரு பிள்ளை" என ஏங்கித் தவித்து இன்னல் பல கண்டு இறுதியில் அன்புடனும் ஆசையுடனும் பெற்றெடுத்த அருமை மகன் இஸ்மாயில் (அலை) அவர்களை அல்லாஹ்விற்காக பலியிடத் துணிந்த இப்ராஹீம் (அலை) அவர்களின் உயர்வான, ஒப்பற்ற மனதையும், ஒரு மாபெரும் தத்துவத்தையும் இந்த ஹஜ்ஜுப் பெருநாள் எமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றது.

முஸ்லிம்களின் பெருநாள் தினம் தனித்துவமானதாகவும் முன்மாதிரியானதாகவும் அமைய வேண்டுமென்று இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. முஸ்லிம்கள் இந்த நாட்டில் தனியாக வாழ்பவர்கள் அல்லர்.



பெரும்பான்மை சமூகங்களுடன் இரண்டறக் கலந்தே வாழ்கிறார்கள். எனவே அவர்களின் உணர்வுகளை மதிக்க வேண்டும். அவர்கள் ஆவேசப்படுகின்ற, ஆத்திரப்படுகின்ற சூழ்நிலைகளை உருவாக்கக் கூடாது. ஒருவருக்கு இருக்கும் உரிமைகளும் மத, கலாசார கொள்கைச் சுதந்திரங்களும் இன்னுமொருவருக்கு இடைஞ்சலாக இருக்க முடியாது என்பது ஜனநாயக தத்துவங்களில் ஒன்றாகும்.

இஸ்லாம் இம்மை, மறுமை பயன்களை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது. இலங்கையில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்கள் தமது பெருநாளின் சிறப்புக்களை மாற்று மத இனங்களுடன் பகிர்ந்துகொள்வதில் எந்தத் தவறுமில்லை.

எமது நாட்டில் உழ்ஹிய்யா சம்பந்தமாக பிரச்சினைகள் ஏற்படாமல் நிம்மதியாகவும் மன சந்தோஷத்துடனும் உழ்ஹிய்யா கொடுக்கும் நிலைமை ஏற்பட வேண்டும் என்று அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம். பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டில் சிறுபான்மையினராகிய நாம் பிறமத உணர்வுகளுக்கு மதிப்பளித்து புனித ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடுவோம்.



கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

# யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை திறன் வகுப்பறைத் திறப்பு விழா

**யா/யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை திறன் வகுப்பறை திறப்பு விழா கடந்த 2022.07.04 அன்று திங்கட்கிழமை அதிபர் செல்வி சாந்தினி மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. அதிபர் தனது தலைமை உரையிலே "இவ்விரண்டு Smart board உம் எமது மாணவர்களின் கல்வியிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை. இத்திறன் வகுப்பறைகள் மாணவரின் சுயகற்றலையும் தேடி அறியும் ஆற்றலையும் மேம்படுத்தும் என்பதோடு இதனை தந்து உதவிய டொக்டர் ஜோதிலிங்கம், திருமதி இ. ஜோதிலிங்கம், டொக்டர் இ. நித்தியானந்தன் ரத்னம் அறக்கட்டளை நிறுவனத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகளை பாடசாலை சமூகம் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்று குறிப்பிட்டார்.**

சிறப்பு விருந்தினர் நாகலிங்கம் சிவநேசன் தனது உரையில் "இப்பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட திறன் வகுப்பறையானது மாணவரை நவீன முறையில் வளர்த்தெடுக்க உதவும்" எனக் குறிப்பிட்டார். சிறந்த செயற்பாட்டுக்கு காரணமாக அமைந்த பெருமக்களான அன்பு உள்ளங்களை மனமார பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் 2016 இல் அதிபர் பதவியேற்றதன் பின்னர் ஆசிரியர்களின் அயராத முயற்சியினால் தமிழ், ஆங்கில போட்டிகளில் மாணவர்கள் பல தேசிய மட்டங்களைப்








பெற்றதுடன் குறிப்பாக தரம் 5 பரீட்சையிலும் 2021 இல் திறன் வகுப்பறை மூலம் எதிர்பாராத பெரும் வளர்ச்சியை இப்பாடசாலை கண்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தனது உரையின் போது இப்பாடசாலைக்கு திறன் வகுப்பறையை ஒழுங்கமைத்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதாகக் கூறினார். அதனைத் தொடர்ந்து டொக்டர் ஜோதிலிங்கம், இப்பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் தானும் தனது மனைவியும் உதவுவதையிட்டு தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

அத்துடன் மாணவரின் செயற்பாடுகள் குறித்தும் அவர் தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார்;.

மாணவரின் தமிழ், ஆங்கில பேச்சுக்களும் Smart board கற்பித்தல் விளக்கம் ((Presentation) நிகழ்த்தப்பட்டமைக்கு வாழ்த்துக் கூறி இப்பிள்ளைகள் சமூகத்தில் பெரும் சிறப்பு மிக்கவர்களாக திகழ்வார்கள் என வாழ்த்தினார்.

இவ்விழாவில் ஆசிரியர்கள், பெற்றோர், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் கலந்து சிறப்பித்தனர்.

# புத்துயிர் பெறப் போகிறது ஜம்இய்யதுல் உலமா

**அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா முஸ்லிம் சமூகத்தின் ஆன்மீக லௌகீக வழிகாட்டல் தலைமை ஆகும்.**

அல்லாஹ்வைத் தவிர யாருக்கும் அஞ்சாத அடிமைப்படாத ஒரு பாரம்பரிய அமைப்பு. முஸ்லிம்களின் கலாசார விழுமியங்கள், பண்பாடுகளை போதிக்கும் வகையில் செயல்படுகின்ற ஒரு நிறுவனம்.

இன்று ஆலிம் உலமாக்கள் பல மொழிகளிலும் தீனை போதிக்கும் ஆற்றல் திறமை படைத்தவர்கள். இன்றைய நவீன உலகில் முஸ்லிம்கள் பல்லின சமூகங்கள் மத்தியில் எப்படி வாழ வேண்டும், எவ்வாறு பண்புகளை பேணி வெளிக்கொணர வேண்டும், எப்படி சகவாழ்வை கட்டியெழுப்பி இன மத நல்லிணக்கத்தை மேம்படுத்தி வாழ வேண்டும் போன்ற வழிமுறைகளை போதிக்கின்ற ஆலிம் உலமாக்கள் நிறைந்த காலம்.

இந்தக் காலத்தில் நாட்டில் பல ஆயிரம் அங்கத்தவர்களை உள்ளடக்கிய அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா அதன் வரலாற்றில் ஒரு பொதுச்சபைக் கூட்டத்தில் இவ்வளவு எண்ணிக்கையைக் கொண்ட ஆலிம் உலமாக்களை ஒன்று சேர்த்து கூடி உறவாடிய சரித்திரம் கடந்த இரு தசாப்தங்களில் நடந்தேறிய வரலாறு இல்லை என எழுதப்படலாம். இதன் ஒவ்வொரு அங்கத்தவர்களின் ஜனநாயக உரிமை இழைக்கப்பட்ட தெரிவு இடம்பெறுவது ஆலிம்களின் கிலேசமாகும்.

நாட்டில் அண்மைக்காலமாக ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் மக்களின் அபிலாஷைகளையும் நோக்கங்களையும் சரியான நேரத்தில் பூர்த்தி செய்யாததும் ஒரு கவலையே. இதன் காரணமாக இந்த அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா மக்கள் மத்தியில் அதிருப்தியை பெற்றிருக்கிறது.

இது இப்படி இருக்க, தற்போதுள்ள அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் மூன்றாண்டு பதவிக்காலம் நிறைவு பெற்றுள்ள வேளையில் புதிய தலைமைத்துவத்துவதிற்கு வழிவகுக்க வேண்டும். புதிய பயணத்திற்கு தயார் நிலையில் தெரிவு இடம்பெறும் ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என அறியக் கிடைக்கிறது.

எல்லாம் வல்ல அல்லாஹ் நமது தூய பணிகள் மிகச்சிறப்பாக இடம்பெற அல்லாஹ்விடம் நாம் பிரார்த்திப்போம்.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா
ALL CEYLON JAMIYYATHUL ULAMA


மௌலவி
**எஸ்எம்எம் முஸ்தபா...**
(பலாஹி) உறுப்பினர் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா

# என் எழுத்துப் பயணத்தில் அச்சுக்கலை அன்றும் இன்றும்

**மனிதனுக்கு தனது வாழ்நாளில் தோன்றும் வித்தியாசமான ஆர்வம் அல்லது ஈடுபாடு போன்றவற்றில் எழுத்தும் ஒன்றாகும். நான் எழுதிய முதற் படைப்பான புதுக் கவிதை ஒன்று 'சிரித்திரன்' சஞ்சிகையில் பிரசுரமாகி, சஞ்சிகையை விலை கொடுத்து வாங்கி, அதை ஒரு குழந்தை போல அணைத்தபடி ஒரு நாளில் பதினைந்து தடவைகளுக்கு மேலாக வாசித்து, பின்னர் சகோதரர்களுக்கும் சகோதரிக்கும் காட்டி மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டது இன்னும் ஞாபகத்தில் உள்ளது.**

இது நிச்சயமாக 1972 ஆம் ஆண்டில் ஒரு நாளாக இருக்கலாம். சிரித்திரன் சிவஞானசுந்தரம் அவர்களை அந்த நாட்களில் நெருக்கமாக சூழ்ந்திருந்த படைப்பாளிகளில், சசி கிருஷ்ணமூர்த்தி, ராதேயன், டானியல் அன்ரனி போன்றவர்கள் அடங்குவார்கள். ஒரு கவிதை மூலம் கிடைத்த அங்கீகாரம் தொடர்ந்து சில புதுக்கவிதைகளை சிரித்தினின் பிரசுரமாகும் வாய்ப்புக்களை எனக்கு தந்தது.

அதனைத் தொடர்ந்து யாழ்பபாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட 'செம்மலர்கள் இலக்கிய வட்டம்' என்னும் அமைப்பில் நன்கு அறியப்பெற்ற பல




படைப்பாளிகள் முக்கிய பதவிகளில் இருந்து அதை இயக்கிச் செல்ல, நானும் அவர்கள் நடந்து செல்லும் தடங்களில் என் பாதம் பதித்து எனது பயணத்தை இலகுவாக்கிக் கொண்டது போன்ற ஒரு பசுமையான நினைவு இப்போது பளிச்சிடுகின்றது.

மேற்குலக நாடொன்றில் தற்செயலாக நான் தேர்ந்தெடுத்த பத்திரிகைத் துறைக்குள் காலடி எழுத்து வைத்து சுமார் 28 வருடங்கள் பயணித்து வெற்றிகள், தோல்விகள், அவமானங்கள் என அனைத்தையும் அ|னுபவித்து நிற்கையில்தான் ஒரு நாள் என் எழுத்துப் பயணத்தின் ஆரம்ப நாட்களுக்கு அழைத்துச் செல்லும் வகையில் ஒரு சம்பவம் இடம்பெற்றது.

அது 'கொரோனா' உலகை ஆக்கிரமிக்கத் தொடங்கிய 2020 மார்ச் மாதம். ஒரு நாள் எனது முகநூல் பக்கத்தில் கனடாவில் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் கவிஞர் உருத்திரமூர்த்தி சேரன் ஒரு பிரசுரத்தைப் பதிவு செய்திருந்தார். நான் முகநூலைத் திறந்த போது, அந்த பிரசுரமே என்னைப் பார்த்துச் சிரித்தபடி வரவேற்றது. (அதை இந்தப் பக்கத்தில் காணலாம்).

முகநூலில் காணப்பட்ட தகவல்களின் படி அந்தப் பிரசுரத்தை தனது முகநூலில் பதிவிட்டவர், எனது நாற்பத்தைந்து வருட கால இலக்கிய நண்பர் புத்தளத்துக் கவிஞர் ஜவாத் மரைக்கார் என்றும், இந்த பிரசுரத்திற்கும் எனக்கும் 'அதிகம்' தொடர்பு உள்ளது என்று உணர்ந்து கொண்டு கவிஞர் சேரன் எனது முகநூல் பக்கத்தில் அதை ஏற்றம் செய்திருக்கின்றார் என்பதையும் நான் உணர்ந்து கொண்டேன்.

அந்த நாட்களில் இருந்த அச்சுத் தொழில் சம்பந்தப்பட்ட வளர்ச்சியும் வா ய்ப்புக்களும் இவ்வளவுதான் என்று எனக்கு உணர்த்திய அந்த பிரசுரத்தை பிரதி எடுத்து மிகுந்த ஆர்வத்தோடு படிக்க ஆரம்பித்தேன்.

அந்தப் பிரசுரம் அச்சான அச்சுக் கூடம் எனக்கு ஞாபகம் வந்தது. கைகளால் அச்சுக் கோர்த்து, கால்களால் இயக்கும் அச்சு இயந்திரத்தில் வெட்டப்பட்ட காகிதங்களை கைளால் ஒவ்வொன்றாக எடுத்து வைத்து அச்சாகிய அந்த பிரசுரத்தை மீண்டும் மீண்டும் பார்க்கின்றேன்.

ஆமாம். 1972 ஆம் ஆண்டளவில் சிரித்திரன் சஞ்சிகை மூலமாக கவிஞனாகவும் எழுத்தாளனாகவும் அறிமுகமான நான் எழுதிய கவிதைகள் அடங்கிய 'போலிகள்' என்னும் புதுக்கவிதையின் வெளியீட்டு விழாவிற்கான அழைப்பே அந்தப் பிரசுரமாகும்.



**ஆர்.என்.லோகேந்திரலிங்கம்...**
கனடா

# பிறை டீவியில் ஹஜ் பெருநாள் சிறப்பு நிகழ்ச்சி

ஹஜ்ஜுப் பெருநாள் தினமான இம்மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிறை டீவியில் பி.ப. 5 மணிக்கு சிறப்பு பெருநாள் நிகழ்ச்சி ஒளிபரப்பப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சிகளில் மௌலவி அஸ்கர் (பாகவி), வழங்கும் பயான், கஸீதா, பாடல்கள் ஆகியவற்றுடன் கவிஞர்கள் என். நஜ்முல் ஹுசைன், லைலா அக்ஷியா ஆகியோரின் கவிதைகளும் இடம்பெறும் எனவும் பிறை டிவி பிரதானி ரிஸ்வான் தயாரித்து வழங்கும் இந்நிகழ்ச்சியை சிரேஷ்ட அறிவிப்பாளர் கலைநிலா எஸ். எம். உவைஸ் ஷெரீப் தொகுத்து வழங்குவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஸ்ரீ சத்ய சாயிபாபா பகவான் "குரு பூர்ணிமா"

ஸ்ரீ சத்ய சாய்பாபா பகவான், சற்குருசீரடி சாயி பாபா இருவரையும் குருவாக வழிபடும், சாயி பக்தர்களுக்கு உரித்தான புனித நன்நாள்" குரு பூர்ணிமா" தினமாகும்.

எதிர்வரும் பௌர்ணமி 13 ஆம் திகதி புதன்கிழமை கொழும்பு புதுச்செட்டித் தெருவில் அமைந்துள்ள. ஸ்ரீ சீரடி சாயி இராஜகோபுரத்தில், வடஇந்திய சீரடி சாயி சமாஜத்தின் ஏற்பாட்டில், பூஜித்து எடுத்துவரப்பெற்ற, சீரடி சாயி "புனிதக்காவி சீரடி கொடி" இராஜ கோபுர த்தில் ஏற்றிவைக்கப்படவுள்ளது.

அன்று காலை 5 மணியளவில் காக்காடஆராத்தியுடன், புட்டபர்த்தி, மைலாப்பூரில் கிடைக்கப்பெற்ற சாயி அவதாரங்களின் திருவுருவச்சிலைகளுக்கு பரிபூரண அபிஷேகங்கள் செய்யப்பட்டு, அவர்களது பாத திருவடிகளுக்கு பாதபூஜையுடன் மதிய ஆர்த்தி நடைபெறும். மாலை 5 மணிக்கு சாயற்கால ஆர்த்தியும் சீரடி சாயி நாதரின் பல்லக்கு பவணியுடன் இரவு மங்கள ஆராத்தி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரயில்வே தொழிற்சங்க போராட்டம்......தொடர்...

நேற்று (06) மாலை பெருந்தெருக்கள் அமைச்சில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போது தங்களது தொழிற்சங்க நடவடிக்கைகளை நிறுத்தி வழமை போல் ரயில் சேவைகளை தொடர தொழிற்சங்கங்கள் இணங்கின.

அவர்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினை தொடர்பாக கவனம் செலுத்திய போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன, அதனை விரைவாக தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் செயலாளர் ரஞ்சித் பிரேமசிறி மற்றும் புகையிரத திணைக்கள பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஊழியர்கள் சேவைக்கு வருகை தர முடியவில்லை என்பதன் பேரில் சில புகையிரதங்கள் சேவையில் ஈடுபடாததால் ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதே கலந்துரையாடலின் முக்கிய நோக்கமாக இருந்தது.

புகையிரத திணைக்களத்துக்கு குறைந்த அளவே பெற்றோல் கிடைப்பதால் எரிபொருளை அனைவருக்கும் வழங்குவது சிரமம் என்றும் கோட்டா முறையில் அத்தியாவசியமானவர்களுக்கு மாத்திரமே பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்ததாகவும் புகையிரத பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

அத்துடன் போக்குவரத்து பிரச்சினையை தீர்ப்பதற்காக புகையிரத திணைக்களத்துக்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் போக்குவரத்து சபை பஸ் வண்டிகள் சிலவற்றைப் பெற்றுக் கொள்ளும் திட்டமொன்றை உருவாக்கவும் புகையிரத திணைக்கள ஊழியர்களுக்காக போக்குவரத்து வசதிகளை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இங்கு தெரிவிக்கப்பட்டது.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர்,எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பயணிகள் பாதிப்புக்குள்ளாகியுள்ள இச்சந்தர்ப்பத்தில் ரயில் சேவை போன்று இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டிகளை சேவையில் ஈடுபடுத்தி பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றுவது அனைவரதும் பொறுப்பாகும் என தெரிவித்தார்.

ஏனைய தொழிற் பிரச்சினைகளை முடிந்தளவு எதிர்காலத்தில் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்து கௌரவமான சேவையாக கருதி இதனை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தொழிற்சங்க நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்னர் பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வினை பெற்று கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து அமைச்சர் தொழிற்சங்கங்களிடம் வேண்டுகோள் விடுத்தார். பயணிகள் சில சந்தர்ப்பங்களில் குழப்பம் விளைவிப்பதால் தங்களுடைய உறுப்பினர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் குறித்தும் தொழிற்சங்க பிரதிநிதிகள் தெரிவித்தார்கள்.

அதற்காக பாதுகாப்பு பிரிவினருடன் கலந்துரையாடி அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து அமைச்சர் ரயில்வே திணைக்கள பொது முகாமையாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

## ஹிருணிகாவுக்கும் கைதான...தொடர்...

ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட 11 பேரே இவ்வாறு பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதியின் இல்லத்துக்கு அருகில் நேற்று (06) காலை ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட 11 பேர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போதே, அவர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

## அமைச்சுப் பதவியிலிருந்து...தொடர்...

நிறுவனம் ஒன்றுக்குமிடையில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் பண கொடுக்கல் வாங்கல் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் நேற்றுமுன்தினம் (05) பாராளுமன்றின் முன்வைத்த குற்றச்சாட்டு குறித்து விரிவான விசாரணைகளை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். அதற்கமைய, குறித்த விசாரணைகள் நிறைவடையும் வரையில் ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சுப் பதவியில் இருந்து தற்காலிகமாக நிமல் சிறிபால டி சில்வா விலகியிருப்பார் எனவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை மக்களுக்கு தமிழக...தொடர்...

நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது. அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வும், தட்டுப்பாடும் மக்களின் வாழும் சூழலை வெகுவாக புரட்டிப்போட்டுள்ளது. எரிபொருள் பற்றாக்குறை, பலமணி நேர மின்வெட்டு, தொழிற்சாலைகள் மூடல், ஊழியர்கள் வேலை நிறுத்தமென நாடு முழுவதும் இயல்புநிலை முடங்கி வருகிறது.

இந்நிலையில் இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் தவிக்கும் மக்களுக்கு உதவிடும் வகையில் தமிழக போலீஸ்துறை சார்பில் 01 கோடியே 34 இலட்சம் (இந்திய ரூபா) ரூபாவும் இந்திய போலீஸ் பணி அதிகாரிகள் சங்கம் சார்பில் 06 இலட்சத்து 63,000 ரூபாவுமென மொத்தம் 01 கோடியே 40 இலட்சம் ரூபா நிதி சேகரிக்கப்பட்டிருந்தது.

இந்த நிதிக்கான காசோலையை சென்னை தலைமை செயலகத்தில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் தமிழக போலீஸ் டி.ஜி.பி. சைலேந்திரபாபு வழங்கினார்.

இச் சந்தர்ப்பத்தில் சென்னை போலீஸ் ஆணையர் சங்கர் ஜிவால், சி.பி.சி.ஐ.டி., டி.ஜி.பி. முகமது ஷகில் அக்தர், தாம்பரம் போலீஸ் ஆணையர் ஏ.அமல்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சீமெந்து விலை மீண்டும் ரூபா...தொடர்...

பக்கெற் 900 ரூபாவாக காணப்பட்டபோதிலும், இந்த ஒரு வருட காலப் பகுதிக்குள் சீமெந்து பக்கெற்றின் விலை 6 சந்தர்ப்பங்களில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் எரிபொருட்களின் விலையேற்றம் ஆகியன காரணமாக சீமெந்து பக்கெற்றுகளை பல்வேறு இடங்களுக்கும் கொண்டு செல்வதில் பாரிய அசௌகரியங்களையும், போக்குவரத்து பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வருவதாக சீமெந்து விநியோகஸ்தர் சங்கத்தினர் குறிப்பிடுகின்றனர். சீமெந்து விலையேற்றம் காரணமாக வீடுகள், கட்டிடங்கள் நிர்மாணத் துறையில் ஈடுபடுவோரும் தமது தொழிற்துறையில் பாரிய பின்னடைவை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பிரதமர் பதவியை...தொடர்...

சர்வதேசத்திற்கு மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு நாம் தயாராக இருக்கிறோம். தற்போதைய அரசாங்கம் தொடர்பில் உள்நாட்டிலும் சர்வதேசத்திற்கு மத்தியிலும் நம்பிக்கை இல்லை.

எனவே, நம்பிக்கை மிகுந்த நிலையானதொரு ஆட்சிக்கான தேவை தற்போது ஏற்பட்டுள்ளது. இந்தநிலையில் குறுகிய காலத்தில் நாட்டை மீட்டெடுக்க எம்மால் முடியும் என தெரிவித்தார்.

இதற்காக ரணில் விக்ரமசிங்க பிரதமர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## நிதியமைச்சர் பதவியிலிருந்து...தொடர்...

பேரழிவிற்குத் திட்டமிட்டுள்ளார். தற்போதைய டொலர் நெருக்கடியை தீர்க்க அவரிடம் எந்தவிதமான திட்டமும் இல்லை. இலங்கையின் சகல பொருளாதார நெருக்கடிகளும் டொலர் நெருக்கடியுடன் தொடர்புபட்டுள்ளது. நிதியமைச்சர், நண்பர்களிடம் இருந்து கடன் வாங்க திட்டமிட்டுள்ளார். நாட்டுக்கான பணப்புழக்கத் திட்டமிடலில் நிதி அமைச்சரிடம் எதிர்கால திட்டங்கள் எதுவும் இல்லை. அத்துடன், டொலர் ஈட்டுதல், கடன் பெறுதல், நிதியுதவி கிடைக்கக்கூடிய கடன் எல்லை வசதிகள் மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கான கடன் எல்லை வசதிகள் தொடர்பான அனைத்து விடயங்களையும் நிதி அமைச்சர் தாமதப்படுத்தியுள்ளார்.

இந்த காரணங்களுக்காக நிதியமைச்சர் பதவியிலிருந்து பிரதமர் ரணில் விக்ரமசிங்க விலக வேண்டும் என அமைச்சர் தம்மிக்க பெரேரா வலியுறுத்தினார்.

## எதிர்வரும் நாட்களில்...தொடர்...

அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று (06) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

10 ஆம் திகதி மற்றும் 15,17 ஆம் திகதிகளில் இரண்டு டீசல் கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளதாகவும் 08 – 09 க்கு இடையில் வரவிருந்த கப்பல் 10 ஆம் திகதி வரும் என்றும் 22 – 23 ஆம் திகதிகளுக்குள் பெற்றோல் கப்பல் ஒன்றும் நாட்டை வந்தடையும் என்றும் அமைச்சர் கூறினார்.

ஐந்து எரிபொருள் கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்த கருத்து சரியானது என்று குறிப்பிட்ட அமைச்சர், 22,23 நாட்களுக்கு முன்னர் வரவிருந்த பெற்றோல் கப்பலுக்கு முற்பணத்தை செலுத்துவதற்கு இடையூறு ஏற்படாத பட்சத்தில் அது சரியெனவும் அமைச்சர் தெரிவித்தார். உரிய பணம் செலுத்திய பிறகு 13,15க்குள் பெற்றோல் கப்பலொன்றை கொண்டு வர வாய்ப்பு உள்ளது.

பெற்றோல் கப்பலுக்கு செலுத்துவதற்காக மத்திய வங்கி 26 மில்லியன் டொலர்களை தயார் செய்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

விஜித ஹேரத் எம்.பி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும், சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தை மூட வேண்டிய அவசியம் இல்லை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பெற்றோல் திருடும் போது...தொடர்...

தீப்பற்றி எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிள் தீப்பற்றிய போது, திருட்டில் ஈடுபட்ட நபர் அதனை அணைப்பதற்காக தண்ணீர் என நினைத்து வாளி ஒன்றிலிருந்த தின்னரை மோட்டார் சைக்கிளில் ஊற்றிய போது மோட்டார் சைக்கிள் வேகமாக தீப்பற்றி யதாக விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஓட்டமாவடி – 01 சீனிப்போடியார் வீதியிலுள்ள வீடு ஒன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த சம்பவத்தில் வீட்டின் கூரை மற்றும் கதவு, ஜன்னல்கலும் எரிந்துள்ளன. இவ்வாறு தீப்பற்றிய போது "மோட்டார் சைக்கிள் எரிகிறது எழும்புங்கள்" என்று குரல் ஒன்று கேட்டவுடன் தாம் எழுந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 24 கரட் பவுண் 1,80,250... தொடர்...

24 கரட் தங்கப் பவுண் ஒன்று 180,250 ரூபாவாக பதிவாகியது. 21 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 157,750 ரூபாவாக பதிவாகியது.

அதேபோல 22 கரட் தங்கப் பவுண் ஒன்று 165,250 ரூபாவாக பதிவாகியதுடன் கடந்த மாதம் 30ஆம் திகதி 22 கரட் தங்கப் பவுண் ஒன்று 170,000 ரூபாவாகவும், கடந்த திங்கட்கிழமை (04) 168,850 ரூபாவாகவும் பதிவாகியிருந்தது.

உலக அரசியல் நெருக்கடி காரணமாக தங்கத்தின் விலை உயர்ந்துள்ளதாக திறனாய்வாளர்கள் கூறினாலும், அதையும் கடந்து வேறு சில காரணங்களும் தங்கத்தின் விலையில் தாக்கம் செலுத்திவருவதாக குறிப்பிடப்படுகின்றது. தங்கம், மிகப்பெரிய சொத்தாக மதிக்கப்படுகிறது. ஒருசில நேரங்களில் அது பொருளாதார பாதுகாப்பையும் தருகிறது. நிதி நெருக்கடியின் போது தங்கத்தை விற்று பணமாக்கி கொள்ளவும் முடியும்.

தங்கத்தின் மீது செய்யப்படும் முதலீடுகளுக்கு தக்க இலாபம் கிடைத்து வருகிறது. இது தவிர, பொதுவாக குடும்பங்களில் தங்க ஆபரணங்கள் தலைமுறை தலைமுறையாக கைமாறி கொண்டே இருக்கும். அதனால் தான் குடும்பத்தில் தங்கத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்த இடம் அளிக்கப்பட்டு வருகிறது.

## அடுத்த வாரம் கொழும்பில்...தொடர்...

ஜூன் 11ஆம் திகதி முதல் ஓகஸ்ட் முதல் வாரம் வரை நாட்டுக்கு 33,000 மெ. தொன் சமையல் எரிவாயு கிடைக்கவுள்ளதாகவும் தெரிவித்த பிரதமர், தற்போது நாட்டில் நிலவும் சமையல் எரிவாயு நெருக்கடி ஓகஸ்ட் மாத முதல் வாரத்தில் நீங்குமென்றும் சபையில் நம்பிக்கை வெளியிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று மக்கள் விடுதலை முன்னணி எம்.பி விஜித ஹேரத் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் சபையில் நேற்று மேலும் தெரிவித்த பிரதமர்,

ஜூலை 11ஆம் திகதி அல்லது 12ஆம் திகதி முதல் நாடு முழுவதும் ஒரு இலட்சத்து 12 ஆயிரம் கேஸ் சிலிண்டர்கள் தினமும் விநியோகிக்கப்படும்.

இந்த தினங்களில் கொழும்பு நகர்ப்புறத்தில் 140 இடங்களில் சமையல் எரிவாயுவை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த அனைத்து இடங்களிலும் 12.5 கிலோ எடை கொண்ட 100 சிலிண்டர்கள் விநியோகிக்கப்படுவதுடன் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் சிலிண்டர்கள் இரண்டு நாட்களில் விநியோகிக்கப்படும்.

கொழும்பு நகரில் அன்றாடம் தேவைப்படும் 12.5 கிலோ கிராம் சிலிண்டர்கள் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதற்காக 25,000 சிலிண்டர்கள் வழங்கப்படவுள்ளன. அதற்கு சமகாலத்தில் பேக்கரிகளுக்கும் சிறுவர்த்தக நிலையங்களுக்கும் சிலிண்டர்களை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த நடவடிக்கைகள் நாட்டில் நிலவும் காலநிலை மற்றும் கடலில் நிலவும் காலநிலையைப் பொறுத்து மாற்றமடையலாம். எனினும் எதிர்வரும் நான்கு மாதங்களுக்கு தட்டுப்பாடின்றி சமையல் எரிவாயுவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

## படகு மூலமாக அவுஸ்திரேலியா...தொடர்...

குச்சவெளி பொலிஸார் சந்தேக நபர்களை திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**ஆழ்கடலூடாக ஆஸி செல்ல முற்பட்ட**

**பெண்கள், சிறுவர் உட்பட 53 பேர் கைது**

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக வெளிநாடொன்றுக்கு செல்ல முயற்சி செய்த சிறுவர்கள், பெண்கள் உட்பட 53 பேரும் 02 ஆட்கடத்தல்காரர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை இறக்கண்டி கடற்கரை பிரதேசம் மற்றும் மன்னார் தாழ்பாடு கடற்கரை பிரதேசத்தில் (05) இரவு மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகள் மூலம் சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு குடியேற முயற்சி செய்ததாக சந்தேகத்தின் பேரில் 53 பேரும் அவர்களுடன் இரண்டு ஆட்கடத்தல்காரர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

சட்ட விரோத குடியேற்றம் உள்ளிட்ட கடல் மார்க்கமாக இடம்பெறும் கடத்தல்களை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் இலங்கையை சுற்றியுள்ள கடல் மற்றும் கடற்கரை பிரதேசங்களை இணைத்ததாக கடற்படையினர் அடிக்கடி தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் (05) கிழக்கு கடற்படையினரும் குச்சவெளி பொலிஸாரின் உதவியுடன் திருகோணமலை இறக்ககண்டி கடற்கரை பிரதேசத்தில் விசேட சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.அவ்வேளையில்சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக வெளிநாட்டுக்கு செல்லும் நோக்கத்துடன் கடற்கரை பிரதேசத்தில் தங்கியிருந்த சந்தேகத்துக்கிடமான 12 ஆண்கள் 11 பெண்கள் 23 சிறுவர்கள் உள்ளிட்ட 46 பேரை கடற்படையினர் கைது செய்தனர்.

படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் ஒரு வயது தொடக்கம் 52 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் அவர்கள் கிண்ணியா,மூதூர், மற்றும் கும்புறுபிட்டியை சேர்ந்தவர்களென அடையாளம் காணப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக குச்சவெளி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு வடமத்திய கடற்படை கட்டளை பிரிவின் கடற்படையினரின் மன்னார் தாழ்ப்பாடு கடற்கரை பிரதேசத்தில் விசேட தேடுதல் நடவடிக்கையின் போது டிங்கி படகை பயன்படுத்தி வெளிநாடுகளுக்கு சட்ட விரோதமாக குடியேற முயற்சி செய்ததாக சந்தேகிக்கும் 03 ஆண்கள் 01 பெண் மற்றும் 3 சிறு பிள்ளைகள் என ஏழு பேருடன் அந்த ஆட்கடத்தலுடன் தொடர்புடைய இரண்டு கடத்தல்காரர்களும் தாழ்பாடு கடற்கரையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டார்கள்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் 05 வயதுக்கும் 48 வயதிற்கும் இடைப்பட்ட கொழும்பு,பதுளை வவுனியா மற்றும் மன்னர் பிரதேசங்களில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டதோடு அவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## அதிக விலையில் எரிவாயுவை...தொடர்...

கணக்காய்வாளர் திணைக்களத்தினூடாக விசாரணை நடத்துமாறு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப் குழு) தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் நேற்று (05) பணிப்புரை விடுத்தார்.

இதற்கு முன்னர் நடைபெற்ற கோப் குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட பணிப்புரைகளை நடைமுறைப்படுத்துவது மற்றும் அவற்றின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராயும் நோக்கில் லிற்றோ கேஸ் லங்கா நிறுவனம், லிற்றோ கேஸ் டேர்மினல் லங்கா (தனியார்) நிறுவனம் மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகியன நேற்று கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தபோதே இந்தப் பணிப்புரை வழங்கப்பட்டது.

கடந்த பெப்ரவரி மாதமாகும்போது கேஸ் கொள்வனவு செய்வதற்காக குறிப்பிட்ட காலத்துக்கான விலைமனுக் கோரல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதுடன், 2,80,000 மெற்றிக் தொன்னுக்காக கேள்விப்பத்திரம் கோரப்பட்டதாகவும் இதற்காக 30 கேஸ் விநியோகஸ்தர்கள் முன்வந்ததாகவும் இங்கு புலப்பட்டது.

இதில் சியாம் கேஸ் நிறுவனம் 96 அமெரிக்க டொலர் வீதம் குறைந்த விலையில் கேள்விப்பத்திரத்தை சமர்ப்பித்தமைக்கு அமைய அந்தநிறுவனத்துக்கு இதனை வழங்க அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

இருந்தபோதும், ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கேள்விப்பத்திரம் கோரலின் வழங்கப்பட்ட நிபந்தனைக்கு அமைய கடன் உறுதிக் கடிதத்தை லிற்றோ நிறுவனம் சமர்ப்பிக்க இந்நாட்டிலுள்ள வங்கிகளுக்கு முடியாமல் போனமையால் சியாம் நிறுவனத்திடமிருந்து எரிவாயுவைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போனதாக லிற்றோ கேஸ் நிறுவனத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அந்த நிறுவனத்துடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டபோதும் கேள்விப்பத்திரம் கோரல் முறையின் போது முன்வைக்கப்பட்ட நிபந்தனைக்கமைய கடன் உறுதிக் கடிதத்தை சமர்ப்பிக்கத் தவறியமையால் எரிவாயுவை வழங்க நிறுவனம் தயக்கம் காட்டியதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தக் காலதாமதம் காரணமாக தற்காலிகத் தீர்வாக இரண்டு வாரங்களுக்கு அவசியமான எரிவாயுத் தொகையான 15,000 மெற்றிக் தொன்னை அவசர கொள்வனவு செய்வது தொடர்பில் சியாம் நிறுவனத்துடன் கலந்துரையாடப்பட்டபோதும், 6,600 மெற்றிக் தொன் எரிவாயுவை மாத்திரமே விநியோகிக்க முடியுமென அவர்கள் பதில் வழங்கியதால் கலந்துரையாடல்கள் வெற்றியளிக்கவில்லையென்றும் இங்கு புலப்பட்டது. அத்துடன், குறிப்பிட்ட காலத்துக்கான விலைமனுக் கோரலின் கீழ் 129 அமெரிக்க டொலரை வழங்கிய ஓமான் நிறுவனம் மாதமொன்றுக்கு 25,000 மெற்றிக் தொன் வீதம் 04 மாதங்களுக்கு வழங்க இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் லிற்றோ நிறுவனம் தெரிவித்தது.

இதற்கமைய மேற்குறிப்பிட்ட விடயம் அமைச்சரவைக்குத் தெரியப்படுத்தப்பட்டு சியாம் கேஸ் நிறுவனத்துக்கு வழங்கிய குறிப்பிட்ட காலத்துக்கான கேள்விப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டு ஓமான் நிறுவனத்திடம் ஒரு இலட்சம் மெற்றிக் தொன் எரிவாயுவைக் கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பதிரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்காக உலக வங்கியிடம் 70 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவி மற்றும் லிற்றோ நிறுவனத்தின் 20 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகியவற்றை வழங்கி 90 மில்லியன் அமெரிக்க டொலர் செலவுசெய்யப்படவிருப்பதாக லிற்றோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

எரிவாயுத் தேவை அத்தியாவசியமான அவசர தேவையாக இருக்கின்றபோதும் குறைந்த கேள்விப்பத்திரத்தை வழங்கிய சியாம் நிறுவனத்துக்குப் பதிலாக அதிக விலையில் ஓமான் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்வது எதிர்காலத்தில் தவறான முன்னுதாரனமாக அமையும் என்றும், இது தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட்டு உலக வங்கியின் 70 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி வினைத்திறனான முறையில் பயன்படுத்தப்படுகிறதா என்பதை ஆராய்ந்து அறிக்கையிடுமாறும் கோப் குழுவின் தலைவர், கணக்காய்வாளர் திணைக்களத்துக்குத் தெரிவித்தார்.

இந்திய கடன் வசதியின் கீழ் எரிவாயுவைக் கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கப்பட்ட 160 மில்லியன் அமெரிக்க டொலர் தொகையில் எரிவாயுவைக் கொள்வனவு செய்ய முடியாத நிலை குறித்தும் குழு கவனம் செலுத்தியது.

இந்திய அரசாங்கத்தின் நிபந்தனைகளின்படி நாட்டில் உற்பத்தி செய்யப்படாத எரிவாயுவை கொள்வனவு செய்வதே பிரச்சினையென லிற்றோ நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார். இது தொடர்பில் பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

இதனை உடனடியாக ஆராய்ந்து இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை அளிக்குமாறு கோப் குழுவின் தலைவர் நிதியமைச்சின் செயலாளருக்கு பரிந்துரை செய்தார்.

லிற்றோ நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு தற்பொழுது 04 பேர் மாத்திரமே நியமிக்கப்பட்டிருப்பது தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. சட்டரீதியாக ஐவர் இருக்க வேண்டும். பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் நிதி அமைச்சின் ஊடாக நியமிக்கப்படுகின்றபோதும், தாய் நிறுவனத்தின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியவாறு பணிப்பாளர் சபை நியமிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் கோப் குழுவின் தலைவர் வலியுறுத்தினார். இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோப் குழுவின் தலைவர் நிதி அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்தார்.

நிறுவனத்தின் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகிய இரு பதவிகளையும் ஒரே நபர் வைத்திருப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

நிறுவனத்தின் தலைவர் பதவி மாறினாலும், நிறைவேற்று அதிகாரி பதவி நிரந்தரமாக இருப்பதுடன், நிறுவனம் சிறந்த நிலையில் இருக்க வேண்டும் என்பதால், அதற்காக விரைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தையும் குழு வலியுறுத்தியது. இந்த நெருக்கடிக்குத் தீர்வு காணப்பட்டவுடன் அதனைச் சமாளிப்பதற்கு பணிப்பாளர் சபை ஏற்கனவே தீர்மானம் எடுத்துள்ளதாக லிற்றோ நிறுவனத்தின் தலைவர் இங்கு தெரிவித்தார். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு அறிக்கை அளிக்குமாறு குழு பரிந்துரைத்தது.

லிற்றோ கம்பனியின் தாய் நிறுவனமான இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து நிதி உதவியைப் பெற்றுக்கொள்ளக் கூடிய திறன் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் தலைவர் விஜித ஹேரத் கூறுகையில், அரச வங்கியில் சுமார் 05 பில்லியன் ரூபா வைப்புச் செய்யப்பட்டதன் காரணமாகவே கடந்த காலங்களில் எரிவாயுவை கொள்வனவு செய்ய முடிந்தது என்றார்.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க, மஹிந்தானந்த அளுத்கமகே, அனுரகுமார திஸாநாயக்க, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, கலாநிதி சரத் வீரசேகர, ஜகத் புஷ்பகுமார, இந்திக்க அனுருத்த, எஸ்.எம்.மரிக்கார், ஜயந்த சமரவீர, கலாநிதி நாலக கொடஹேவா, பிரேம்நாத் சி.தொலவத்த, மதுர விதானகே ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலய மஹா கும்பாபிஷேகம்





மன்னார் குறூப் நிருபர்

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான பாடல் பெற்ற திருத்தலமான மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நேற்று புதன்கிழமை (6) காலை 9 மணிக்கு இடம்பெற்றது.

திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு சிவசிறி தியாகராஜா கருணானந்த குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு கடந்த 30ஆம் திகதி பூர்வாங்க கிரியைகள் இடம்பெற்றன. அதனை தொடர்ந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (5) மதியம் 12 மணிவரை எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்றது. அதனையடுத்து சுவாமிகளுக்கான கிரியைகள் இடம்பெற்றதுடன் யாகப் பூஜைகளும் நடைபெற்றன.

நேற்று புதன்கிழமை (6) காலை 9 மணியளவில் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற்றது. இதன் போது குருக்கள் மற்றும் மக்கள் என பல ஆயிரக்கணக்கானவர்கள் கும்பாபிஷேக பெருவிழாவில் கலந்து கொண்டிருந்தனர்.

வடக்கின் உதயம் Vadakkin Uthayam

# மன்னாரிலிருந்து இந்தியா செல்ல முற்பட்ட 7 பேர் கைது

மன்னார் குறூப் நிருபர்

மன்னார் தாழ்வுபாடு கடற்கரையிலிருந்து படகு மூலம் இந்தியா செல்ல முயற்சித்த இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 7 பேர் தாழ்வுபாடு கடற்கரை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடற்படையினரால் நேற்று முன்தினம் (5) இரவு 9.35 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா மற்றும் பதுளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்டவர்களில் ஒரு பெண்,சிறுவன்,சிறுமி உள்ளடங்களாக 7 பேரும் மன்னாரைச் சேர்ந்த 2 படகோட்டிகளும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் கடற்படையினரால் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னாரில் கரடி தொல்லை



மன்னார் குறூப் நிருபர்

**வனஜீவராசி அதிகாரிகள் செல்வதில் சிக்கல்**

**மிருக கடிக்குரிய மருந்து தட்டுப்பாடு**

மன்னார் மாவட்டத்தில் வட்டுப்பித்தான் மடு, நானாட்டான், வங்காலை போன்ற பகுதிகளில் அண்மைய நாட்களாக கரடி ஒன்றின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் பலர் கரடி கடிக்கு இலக்காகியுள்ளனர்.

அதில் ஒருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இப்பகுதியில் தொடர்ச்சியாக கரடியின் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று வருகின்ற போதும் வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் எரிபொருள் பிரச்சினை காரணமாக அப்பகுதிக்கு செல்லமுடியாதுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதனைதொடர்ந்து இரவு நேரங்களில் மக்கள் வசிக்கும் பகுதிகளுக்குள் கரடி நுழைவதாகவும் அதிகாலை நேரங்களில் நடமாடும் மக்களை தாக்குவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

மன்னார் பொது வைத்தியசாலையில் மிருக கடிக்குரிய மருந்து தட்டுப்பாடு நிலவி வருகின்ற நிலையில் தொடர்ச்சியாக கரடி மக்கள் வசிக்கும் பகுதிக்குள் நுழைவது அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு மன்னார் பிரதான காலப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர் ஒருவரையும் கரடி தாக்கியுள்ளது. இதனையடுத்து இவர் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனவே வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கான எரிபொருளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 27 ஆம் திகதி அதிகாலை 3.30 மணியளவில் கரடி நானாட்டான் பிரதேச செயலக பிரதான வீதியில் நடமாடுவதையும், கரடியை கண்டு நாய்கள் ஓடுவதையும் காணக்கூடியதாகவிருந்தது.

இப்பகுதியில் கரடியின் நடமாட்டத்தை CCTV கேமரா காட்சிகளில் காணக்கூடியதாகவிருந்தது.

# வட்டுவாகல் சப்தகன்னிமார் ஆலயம் தீர்த்த வீதி, பரியலம்விடும் இடத்தை விடுவிக்குமாறு கோரிக்கை



மாங்குளம் குறூப் நிருபர்

வட்டுவாகல் சப்தகன்னிமார் ஆலயத்தின் தீர்த்த வீதி, பரியலம்விடும் இடம் என்பவற்றை விடுவிக்குமாறு மாவட்ட செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, வட்டுவாகல் சப்தகன்னிமார் ஆலயத்தின் தீர்த்த வீதி மற்றும் பரியலம் விடும் இடம் என்பவற்றை இராணுவத்தினரிடமிருந்து விடுவித்து தருமாறு கோரி மாவட்ட செயலாளரிடம் கோரிக்கை கடிதமொன்று வட்டுவாகல் சப்தகன்னிமார் ஆலய நிர்வாகத்தினால் கையளிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் தீர்த்த வீதி, பரியலம் விடும் இடம் விடுவித்தல் தொடர்பானது எனும் தலைப்பில் அரசாங்க அதிபரிடம் கடிதம் எழுதப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் வருடாந்த பொங்கல் நிகழ்வின் முதல் நிகழ்வாக தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு இடம்பெறுகின்றது. வீதியானது இராணுவ கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. எமது ஆலயத்தின் தீர்த்த வீதியூடாக செல்ல இராணுவம் தடுத்தமையால் வேறு பாதை ஊடாக சென்று தீர்த்தம் எடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டோம்.

இதன் காரணமாக சில அசாதாரண நிகழ்வுகளும் இடம்பெற்றது. பரியலம் வழிவிடும் இடத்தில் சீமெந்தினால் தூண்கள் அமைக்கப்பட்டு இரும்பினால் கதவும் அமைப்பட்டிருந்தது.

இப்போது அவ்விடமானது இராணுவத்தினால் உடைக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளது. ஆலய நிர்வாகமாகிய நாங்கள் தங்களிடம் கேட்டுக்கொள்வது என்னவென்றால் எமது ஆலய சம்பிரதாயங்களுக்கு உட்படுத்தப்பட்ட இரண்டு இடங்களையும் இராணுவத்திடமிருந்து மீட்டு தருமாறு மிகவும் பணிவாக கேட்டுக்கொள்கிறோம்.

எமக்கான பதில் மூன்று நாட்களுக்குள் கிடைக்காத பட்சத்தில் பொதுமக்கள் இணைந்து ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளவுள்ளோம் என்பதனையும் அறியத்தருகின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாரிய மரம் முறிந்து வீழ்ந்ததில் பெண் படுகாயம்



ஹற்றன் சுழற்சி நிருபர்

வெலிமடை டயரபா மேற்பிரிவு தோட்டத்தில் பாரிய மரமொன்று தோட்ட குடியிருப்பில் சரிந்து விழுந்தமையால் வீடு முற்றாக சேதமடைந்துள்ளது.

இதனால் வீட்டிலிருந்த பெண் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் (05.07.2022) இரவு நிலவிய காற்றுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக வெலிமடை டயரபா மேற்பிரிவு தோட்டத்தில் பாரியமரமொன்று தோட்ட குடியிருப்பில் சரிந்து விழுந்ததில் வீடு ஒன்று முற்றாக சேதமடைந்துள்ளது.

இவ்விபத்தில் குடியிருப்பில் வசித்த பெண்ணொருவர் காயங்களுடன் வெலிமடை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குடியிருப்பில் முறிந்து விழுந்த மரம் தொடர்பில் பல மாத காலமாக தோட்ட நிர்வாகத்திடம் தெரிவித்து வெட்டுவதற்காக அனுமதி கேட்ட போதிலும் தோட்ட நிர்வாகம் அனுமதி வழங்கவில்லை என பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இதனாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

மலைச்சாரல்

# அரச பஸ்கள் இன்மையால் மக்கள் அவதி

தலவாக்கலை குறூப் நிருபர்

நாவலப்பிட்டி இலங்கை போக்குவரத்து சபையினால் நீண்டதூர குறுந்தூர பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படாமையால் தாம் கடும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துவருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

தலவாக்கலை நாவலப்பிட்டி மார்க்கத்தில் தற்போது இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை எனவும், இதன்காரணமாக ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், அரச மற்றும் தனியார் நிறுவன ஊழியர்கள் மற்றும் பருவ பயணச் சீட்டுடன் (சீசன்) தமது அன்றாட கடமைகளுக்கு செல்லும் ஏனைய பயணிகள் மற்றும் இதர தொழில்களுக்கு செல்வோர் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். கிராமப்புற மற்றும் தோட்ட புற வீதிகளில் முறையாக இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்கள் இயக்கப்படாமையால், டீசல் நெருக்கடியால் அந்த வீதிகளில் தனியார் பஸ்கள் சரியாக இயங்காமையால் பயணிகள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகியுள்ளனர். நாவலப்பிட்டி டிப்போவில் கடும் டயர் தட்டுப்பாடு நிலவுவதால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் டயர்கள் இல்லாததால் சுமார் 22 பஸ்களை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக நாவலப்பிட்டி டிப்போ முகாமையாளர் அனுர ஜயசிங்க தெரிவித்துள்ளார். இப்பிரச்சினை தொடர்பாக மேலதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பபட்டுள்ளதாகவும், அதற்கேற்ப டயர் நெருக்கடிக்கு தீர்வு கிடைத்ததன் பின்னர் எதிர்காலத்தில் பஸ்களை முறையாக இயக்க முடியும் எனவும் பருவப் பயணச் சீட்டு (சீசன்) பெற்ற பாடசாலை மாணவர்கள் பாடசாலை சீருடை அல்லாமல் வேறு ஆடைகள் அணிந்தும் பஸ்களில் பயணிக்கும் வசதியை நாவலப்பிட்டி டிப்போ வழங்கியுள்ளதாகவும் ஜெயசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# கோழி பண்ணையில் திருட்டு



கம்பளை நிருபர்

கம்பளை குறுந்துவத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேரிவலை கீழ்பிரிவு பிரதேசத்தில் கோழி பண்ணையொன்றில் கோழிகள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேரிவலை கீழ் பிரிவு பிரதேசத்தில் விற்பனைக்காக வளர்த்து வந்த பெரிய கோழிகளை இரவில் சில விசமிகள் வேலியை அறுத்து அதற்கு உள்ளே சென்று திருடிக்கொண்டு சென்றுள்ளனர்.

சுமார் 50 கோழிகள் திருட்டு போயுள்ளதால் உரிமையாளர் குறுந்துவத்த பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார் .

மேரிவலை கிழ் பிரிவு பிரதேசத்திலுள்ள மக்களுக்கே திருடியகோழிகளை விற்பனை செய்துள்ளார் .

இதனையடுத்து சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தற்போது வியாபார நிலையங்களில் 1 கிலோ 1100,1200 ரூபாவுக்கு கோழி இறைச்சி விற்பனை செய்யப்படுகின்றது.

எனவே திருடிய கோழிகளை சந்தேக நபர் 900,800 ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளதாக தெரியவருகின்றது.

சந்தேக நபரை நேற்று கம்பளை நீதிமன்றத்தின் ஆஜர் செய்த போது எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறுந்துவத்த பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பாலித்த பண்டார வழிகாட்டலுக்கமைய குற்றத்தடுப்பு பிரிவு எஸ்.ஜ புத்திவர்தன மற்றும் பொலிஸ் செரயன் 59856 அக்கலங்க பொலிஸ் கான்ஸ்டபிள் 83809 சதுரன் பொலிஸ் கான்ஸ்டபிள் 70509 கொடித்துவக்கு ஆகிய அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# விவசாய சுற்றுலா கலாசார கிராமத்திட்டம் குறித்து கலந்துரையாடல்



அக்குறணை குறூப் நிருபர்

மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே தலைமையில் கண்டி ஆளுநர் காரியாலயத்தில் இடம்பெற்ற தும்பறை விவசாய சுற்றுலா கலாசார கிராமத் திட்டத்தின் எதிர்காலம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

ஆளுநர் காரியாலய அதிகாரிகளும் மத்திய மாகாண அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# தரிசு நிலங்களை பகிர்ந்தளிக்க பெருந்தோட்ட கம்பனிகள் வழிவிடவும்

பெருந்தோட்டங்களில் காணப்படும் ஆயிரக்கணக்கான தரிசு நிலங்களில் விவசாயத்திற்கு உகந்தவற்றை உடனடியாக தோட்டத் தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு கம்பனி நிர்வாகங்கள் வழிவிட வேண்டுமென பதுளை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இ.தொ.கா முக்கியஸ்தருமான டி.வி.சென்னன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

